தேவனோடு சஞ்சரித்த ஏனோக்கு!

(ENOCH - THE MAN WHO WALKED WITH GOD)

போதகர் K.S. மனோவா

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

தேவனோடு சஞ்சரித்த ஏனோக்கு!

போதகர் K.S. மனோவா

வெளியிடுபவர்:

J. சாம் ஜெபத்துரை
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

முதல் பதிப்பு : அக்டோபர் 85

விலை : ரூ. 3/-

உரிமை ஆசிரியருக்கே.

பிரதிகள் கிடைக்குமிடம் :

J. SAM JEBADURAI
50, Railway Station Road,
KODAMBAKKAM,
Madras - 24.

Pastor K.S. Manova,
D-67, Munirka,
NEWDELHI-110 670

தேவனோடு சஞ்சரித்த ஏனோக்கு !

ஆதியும் அந்தமுமானவரும், அல்பாவும் ஓமெகாவுமானவரும், என்றென்றும் ஜீவிக்கிற யெகோவாவாகிய இஸ்ரவேலரின் ஜெயபலமானவரான இரக்கமுள்ள இரட்சகர் இயேசுகிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே.

ஏனோக்கு என்னும் பக்தியான மனிதனின் வாழ்க்கையை விளக்கமாய் வேதத்தில் வரையப்பட்டிருப்பதை படித்திருக்கிறோம். பழையேற்பாட்டு பக்தர்களில் ஏனோக்கு விசேஷமானவர். ஏனோக்கு என்றால் பிரதிஷ்டை என பொருள்படும். கி. மு. 3378 — 3013ல் வாழ்ந்தவர். ஆதி 5:18—24 வரை படிப்போமானால் இவர் ஒரு குடும்பமானவர். இவரின் குணநலம்பற்றி அறியலாம். ஆதி 5:21 ஏனோக்கு அறுபத்தைந்து வயதானபோது மெத்துசலாவைப் பெற்றபின் முன்னூறு வருடம் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தாராம்.

தேவன் மனிதனுடனும் மனிதன் தேவனுடனும் முகமுகமாய் தேவ சாயலிலும் தேவ ரூபத்தின்படியும் தேவனாலே சிருஷ்டிக்கப்பட்டு சிறப்பும் மேன்மையுமான தேவ மகிமையுடனும் தேவ தரிசனத்துடனும் தேவ ஆசீர்வாதத்துடனும் தேவன் ஆயத்தம் செய்த ஏதேன் என்னும் இனிய தோட்டமதிலே வாழ்ந்தான். உயர்வையும் உன்னதத்தையும் பெற்ற மனிதன் சகலவற்றையும் ஆண்டு கொள்ளவும் அனுபவிக்கவும் அதிகாரம் பெற்றான். ஆனாலும் ஒரு எச்சரிப்பு கொடுத்ததில் தன் கடமையில் பொறுப்பில் தவறினதால் தேவ தண்டனைக்கும், தேவ கோபத்திற்கும், தேவ நியாயத்திற்கும் ஆளாகி தேவ கோபமாம் சாபத்தையும் சபிப்பையும் பின் சற்

ததியாம் யாவர்க்கும் ஆதாம், ஏவாள் சம்பாதித்து வைத்து சென்றனர். ஏனோக்கு ஆதாமின் ஏழாம் தலைமுறையில் பிறந்து முன்னோரைப்போல் வாழாமல் மாற்றமும் வேறுபாடும் உள்ள பிரதிஷ்டையான பக்தியின் வாழ்வு நடத்தினான். ஆதி தந்தை ஆதாம் ஆண்டவர் சந்நிதிவிட்டு ஓடினான். ஒழிந்தான் தேவனிடமிருந்து விலகினான். ஏனோக்கோ தேவனுடனும் தேவனோடும் அனுதினமும் தேவனோடு நடந்தான், சஞ்சரித்தான் என வேதம் கூறுகிறது. வேத வாக்கியங்களும், தீர்க்க தரிசனங்களும், நிறைவேறும் இக்கடைசியான காரிருள் சூழும் நேரத்தில் வாழும் கர்த்தரின் ஜனமே தேவனின் மந்தையாகிய தேவசபையாம் திருச்சபையாரே தேவ ஆவியானவர் உதவி கொண்டு இப்பக்தியுள்ள மனிதனின் பத்து குண நலங்களை வேதவசன அடிப்படையில் தியானிப்போமாக.

1. ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தான்
ஆதி 5-21

தேவன் மனிதனை நேசிப்பதால் மனிதன் தேவனில் நம்பிக்கை கொள்கிறான். ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தான் என்றால் மண்ணாலே உருவாக்கிய உருவத்திற்கு தேவனின் சுவாசத்தை நாசியிலே ஊதினதினால் ஜீவாத்துமா அடைந்தான். நாம் மூச்சுவிடும் சமயம் மேலே சுவாசிக்கும்போது ஏ என்றும் கீழே சுவாசம் விடும்போது சு என்றும் ஆயுள் நாளெல்லாம் ஏசு, ஏசு என சுவாசித்து ஜீவிக்கிறோம், வாழ்கிறோம். ஏனோக்கு எந்நிமிடமும் தன் தேவனாகிய யெகோவாவோடு இன்னல், இக்கட்டு இடைஞ்சல், பாடு, போராட்டம் யாவற்றிலும் தேவனோடு சஞ்சரித்து தேவனுக்காக வாழ்ந்திருப்பான். ஏனோக்கை பின்பற்றிய பக்தியின் வித்து நோவாவும் எப்படி வாழ்ந்தார். நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். நோவா தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். ஆதி 6:9. நோவா என்றால் இளைப்பாறுதல், கிருபை எனலாம். நோவா வாழ்ந்த நாட்களில் மனிதன் வாழ்க்கை மிருகத்திலும் மிருகமாய் வாழ்ந்தனர். தேவ எச்சரிப்பை உணராமல் வாழ்ந்தவர்களில் நோவா

தேவனோடு தன் மனைவி மக்களுடன் நூற்றிருபது வருடமாய் தேவனோடே வாழ்ந்து சஞ்சரித்து தேவசித்தம் நிறைவேற உழைத்தான். உலக அழிவிலே கர்த்தராலே கர்த்தருடைய கண்களிலிருந்து கிருபையாகிய இரக்கத்தை பெற்றான். மீட்கப்பட்டான். அந்நிய தேவர்களை வழிபட்ட நமது விசுவாசத் தந்தையாகிய ஆபிரகாம் வாழ்வளிக்கும் வல்லவராம் வானம் பூமியை உண்டாக்கின தேவனை வழிபட்டான். ஆண்டவர் யோசுவாவைப் பார்த்து சொல்கிறார். "நான் நதிக்கு அப்புறத்திலிருந்த உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமை அழைத்துக்கொண்டு வந்து அவனை கானான் தேசமெங்கும் சஞ்சரிக்கச் செய்து அவன் சந்ததியை திரட்சியாக்கி அவனுக்கு ஈசாக்கை கொடுத்தேன்." யோசுவா 24:3. வாழ்வு கொடுக்கும் தேவன் வார்த்தையில் மாறமாட்டார். ஆபிரகாம் அக்கரையிலே வழிபட்ட தெய்வங்களைப்போல் அல்ல என்றாலும் வாக்குத் தத்தமான சந்ததியை தரும்வரை தேவன் ஆபிரகாமை கானான் தேசமெங்கும் சஞ்சரிக்க செய்தார். ஆபிரகாம் அமைதியின் தேவ நோக்கத்தை, தேவ திட்டத்தை, தேவ தீர்மானத்தை உணராமல் சிந்தியாமல் யோசியாமல் தன் துணைவி பேச்சின்படி அவசரப்பட்டான். ஆனாலும் தேவன் சொன்ன காரியத்தை நிறைவேற்றினார். ஆபிரகாமின் அமைதியற்ற வாழ்வால் அவனின் பின்னடியான இஸ்ரவேல் மக்கள் பல எதிரிகளால் பாடு துன்பம் ஏற்க நேரிட்டன. அந்தப்படி தேவன் அவனை (ஆபிரகாமை) நோக்கி உன் சந்ததியார் அந்நிய தேசத்திலே சஞ்சரிப்பார்கள். அத்தேசத்தார் அவர்களை அடிமைகளாக்கி நானூறு வருடம் துன்பப்படுத்துவார்கள். அப் 7:6 ஒரு போதும் உழைக்காத...பாலும் தேனும் ஓடும் தேசம் கானான் தேசத்தில் பசுமையும் செழுமையும் உண்டான அழகிய கனி நிறைந்த ஒரு போதும் உழைக்காத நாற்று நடாத நன்மையிலே தேவன் நாடு நாடாய் நானூறு வருடம் வனாந்திரத்திலே நடத்தி வந்த மக்களுக்கு கொடுத்தார். அருமையான தேவ ஜனமே பக்தியான ஜனமாம். இஸ்ரேவலர்க்கு நானூறு வருடம் சஞ்சரிப்பாகிய வாழ்க்கையிலும் வனாந்தரத்திலும் எதிரிகள் தாக்குதலிலும் தேவன் அவர்களை கைவிடவில்லை. விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம் பண்ணப்

பட்ட தேசத்திலே பரதேசியைப் போல சஞ்சரித்து அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களில் குடியிருந்தான். எபி 11:19 பூலோகில் புறமதஸ்தன் முன் பரிசுத்த ஜனம் பாடு பற்றுக்குறையில் இருப்பது தேவ விருப்பமில்லை. ஆனால் பரதேச சஞ்சரிப்பையும் கூடார சஞ்சரிப்பையும் தேவன் விரும்புகிறார். பார்வோனின் குமாரத்தியின் புதல்வனாக வாழ்ந்த மோசே மரணத்திற்கும் மனுஷனுடைய பயத்திற்கும் மறைந்து மீதியான் தேசமதிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அப் 7:29. நீங்களும் தேவ சித்தமும் நோக்கமும் நிறைவேறுவதற்கு முன்னமே மாமிச உணர்ச்சியால் போர்களத்தில் இறங்கி தோல்வியுற்ற மோசே போல் வாழ்க்கையில் நிம்மதி சமாதானமின்றி நாடு நாடாய் சஞ்சரிக்கிறீர்களா? ஆபிரகாமின் தேவன் மோசேயை கைவிடா வண்ணம் காத்தது போல் உங்களையும் காப்பார். வாழ்க்கையில் வெறுமை வறுமை தாக்கினதால் எலிமலேக்கு மோவாபிய தேசத்திலே சஞ்சரித்தான். ரூத் 1:1 எலிமலேக்கின் மருமகளாம் ரூத்தின் சந்ததியாம் யோவாஸின் பக்தி வழியிலே பாரினில் பிறந்த தேவக்குமாரன் பரலோகமதிலே விண் தூதர்களுடன் பரமபிதாவிடமிருந்த ஆண்டவர் இயேசு சஞ்சலம் நிறைந்த சபிக்கப்பட்ட பூலோகில் மனு அவதாரமெடுத்து வந்தவர் மிருகங்களின் மத்தியிலே உங்களுக்கு நல்வாழ்வு தர உபவாசத்திலும் வியாகுல வேண்டுதலிலும் சஞ்சரித்தார். அவர் வனாந்தரத்திலே நாற்பது நாள் இருந்து சாத்தானால் சோதிக்கப்பட்டு அங்கே காட்டு மிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தார். மாற் 1:13. இந்தியாவிற்காக எத்தனையோ பரிசுத்தவான்களான, வில்லியம்கேரி, ராக்லண்ட், பரி. தோமா, போன்றோர் தேவனின் ஆத்துமபார ஏவுதலால் ஆசிய கண்டமதிலே உள்ள அந்தகாரம் நிறைந்த இந்தியாவில் ஊழியம் செய்ய வந்து ஏளனத்திலும் பரியாசத்திலும் காண்பவர் பார்ப்பார் முன் எப்படி கிறிஸ்துவுக்காக உழைத்தார்கள். அவர்கள் உழைத்த உழைப்பால் சிந்திய இரத்தத்தால் ஜெபித்த ஜெபம் உங்கள் காதுகளில் கேட்கவில்லையா? இந்திய அப்போஸ்தலன் சாது சுந்தர்சிங் ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொண்டதால் அவரின் சீக்கிய பெற்றோர்

சித்தரவதையுடன் கட்டிய துணியுடன் வீட்டைவிட்டு விரட்டினர். இவரின் படகாட்சி இந்தியிலுண்டு. அதில் சாது சுந்தர்சிங் பல மலை வனாந்தர வழியாய் பல தீவுகள் சென்று சுவிசேஷம் அறிவித்தார். உண்ண உணவு இருக்க இருப்பிடமின்றி அலையாய் அலைந்தார். பயங்கர காட்டின் வழியாய் போனபோது ஒரு அழகிய பாலசிங்கம் அவர் முன் வந்து பணிந்து படுத்தது. அவர் ஜெபித்தார். உடனே எழுந்து அவர் உடலை நாக்கால் நக்கிவிட்டு முன் சென்றது. அதில் இந்தியில் தெளிவாய் உள்ளன. சாதுசுந்தர்சிங்கோ இன்சான் னே சோட் தியாஹை.மஹர் ஜன்வர் நஹி சோடா ஹை என்றுள்ளன. மனிதனை மனிதன் கைவிட்டாலும் மிருகம் கைவிடாதாம். எலியாவை போஷிக்க காகத்தை ஆண்டவர் தெரிந்து கொண்டார். ஆண்டவர் இயேசுவின் தொண்டர்களாம் பவுலும், பர்னபாவும். அந்தியோகியாவிலேசஞ்சரித்து வேறே அனேகரோடுங்கூடக் கர்த்தருடைய வசனத்தை உபதேசித்து பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள். அப் 15:35 நாடு காடு சமுதாயம் உறவினர் ஊரை விட்டு அந்நிய நாட்டினிலே சஞ்சரிக்கிற உழைக்கிற உத்தம தேவபிள்ளையே ஆபிரகாமின் தேவன் இஸ்ரவேலின் யெகோவா ஏனோக்கின் கர்த்தரின் வார்த்தை கூறுகிறது. அன்றியும் பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந் தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாக தொழுது கொண்டு வருகிறபடியால் இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்து கொள்ளுங்கள். I பேதுரு 1:17 ஏனோக்கு, ஆபிரகாம்,இஸ்ரவேலர்கள், மோசே, எலியா ஆண்டவர் இயேசு பவுல் பர்னபா போன்றோர் பாரினில் பரதேசிகளாய் குடிசைகளில் கூடாரங்களில் கர்த்தரை நம்பி வாழ்ந்தனர். அவர்களுக்கு பரலோகத்தில் மேன்மையான பலன் இருந்ததுபோல் உங்களுக்காக ஜீவன் தந்து உயிர்த்தெழுந்த உன்னதர் மகிமையான வீட்டை வாசஸ்தலத்தை ஆயத்தம் செய்கிறார். பரதேசிகளாய் சஞ்சரிக்குமளவும் தேவ பயத்துடனே தேவபக்தியுடனே கர்த்தருக்குள் சஞ்சரிக்க வேண்டும். பரிசுத்த வேதாகம பேர் வைத்து பக்தியற்றவர்களாய் தேவபயமின்றி பூர்வீக கிறிஸ்தவர்களாயிருந்தாலும் பேருக்காக புகழுக்காக பணத்

துக்காக பெண்ணுக்காக தனிப்பட்ட கொள்கையுள்ள வாழ்க்கையுடையவர்கள் தேவனோடு சஞ்சரிக்க தேவன் ஏற்றுக் கொள்ளார் எடுத்துக் கொள்வார்.

2. சஞ்சரிப்பின் பொருள் அந்நியோந்நியம் ஐக்கியம் எனப்படும்.

ஏனோக்கு தன் மனைவி மக்களுடனும் உடனுள்ள யாவரிடமும் விசேஷமாய் தேவனிடம் ஐக்கியமாய் ஒற்றுமையாய் ஒரு மனதாய் வாழ்ந்தான். நாம் ஏனோக்கைக் போல தன் மனைவியுடன் தன் பிள்ளைகளுடன் உடன் பிறந்தவர்களுடன் உற்றார் உறவினருடன் தன் கண் முன் உள்ளவர்களிடம் அன்பின் ஐக்கிய தெய்வ தன்மையை காண்பிக்கிறோமா? உடன் உள்ள சபைமக்களிடம் அருகிலுள்ள அன்பு சகோதர சகோதரிகளிடம் ஒரே வயிற்றில் பிறந்தவர்களிடம் ஐக்கியமாயிருப்பதில்லை. ஆதி அன்பு, ஆதி ஐக்கியம், ஆதி ஒரு மனப்பாடு இன்றைய கிறிஸ்தவர்களிடம் காணப்படாதது குறித்து வேதனை அடைகிறேன். ஐக்கியம் என்றால் ஒற்றுமை, ஒற்றுமை என்றால் ஒருமனம் இன்றைய கிறிஸ்தவர்களிடம் மேற்கூறியவை எதிர்மாறு குணநலம் காணப்படுகின்றன. ஒற்றுமை × வேற்றுமை, ஐக்கியம் × பிரிவினை. ஒருமனப்பாடு × இருமனப்பாடு என்று தலை கீழாய் போக காரணம் கிறிஸ்துவின் போதனையும் புத்தியும் இல்லாததே. ஆவிக்குரிய கண் திறக்கப்பட்டவர்கள் வாழ்வில் பல வெறிகள் பைத்தியங்கள் ஐக்கியப் பைத்தியம், உபதேசப் பைத்தியம், சபைப் பைத்தியம், சாதிப்பைத்தியம், சுக போக பைத்தியம் இவைகளை உருவாக்குவது சத்துரு ஐம்புலனிலும் கிரியை செய்து மனசாட்சி மங்கி, மங்க வைத்து விடுகிறான். இதனால் கிறிஸ்துவின் நாமத்திற்கும் கிறிஸ்துவ சமுதாயத்திற்கும், கிறிஸ்தவ பணிக்கும், கிறிஸ்தவ கொள்கைக்கும் அவமானம், வெட்கம், கேலி, பரியாசம், தூஷணம் புற ஜாதியார் கண்டு களி கூற சத்துரு செய்கிறான். நம் ஆத்தும நேசர் அன்பாய் அருளிய அறிவுரைகள், ஆலோசனைகள், அற்புத

உவமைகள், அதிசய உதாரணங்கள் வீணாய் போய் விடாது நம்மை கண்டிப்பாய் நியாயம் கேட்பார். கண்ணீருடன் கெத்சமனேயிலே கதறி குமுறி கண்முன் இருந்த உடன் சகோதரர்கள் தமது சீஷர்களைப் பார்த்து சொன்னார்.

நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாய் இருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார். யோவான் 13:35. அன்பில்லாத கிறிஸ்தவர்களே உங்களுக்கு ஆண்டவர் கூறிய வார்த்தைப்படி நடவாமலிருக்கிற இந்நாட்களில் இவ்வசனத்திற்கு எப்படி உங்களுக்கு விளக்கி காட்டுவது. நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று கிறிஸ்துவின் அன்பை கிறிஸ்துவின் சினேகத்தை கிறிஸ்துவின் மகிமையைக் கண்ணால் கண்டால் காண்கிற எல்லாரும் ஒவ்வொரு தேசத்தாரும் நாட்டாரும் ஊராரும் இவர்கள் கிறிஸ்துவின் சீஷர்கள் என்று அறிந்து கிறிஸ்துவை பின்பற்றுவார்கள். கண்ணால் காணும் சகோதர சகோதரி மனைவி பிள்ளைகள் உடன் உள்ள சகோதரரிடம் அன்பு காண்பிக்கா விட்டால் நீங்கள் தேவனை அறியாதவர்களே. யோவான் பக்தன் யோசனையை படியுங்கள். தேவனிடத்தில் அன்பு கூறுகிறேனென்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனை பகைத்தால் அவன் பொய்யன்தான். கண்டசகோதரனிடத்தில் அன்பு கூறாமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவான். I யோவான் 4:20 பூலோகில்தான் கண்ணால் காண்கிற சகோதானில் சகோதரியில் அன்பு கூறாத கிறிஸ்தவன் கிறிஸ்தவள், கண்ணாலே காணாத தேவனிடம் மெய்யாய் அன்பு கூறமாட்டார்கள். அன்பு என்றால் பல பொருள் அடங்கி உள்ளன. ஆங்கிலத்தில் Love என்று மட்டும் உள்ளன, ஆனால் தமிழில் அன்பு என்றால் இரக்கம், பரிவு, பாசம், நேசம், தயாளம் எனகூறலாம். இயேசு ராஜா கூறியபடி தெய்வத்தை அறிந்தவன் அறிந்தவள் தேவனால் பிறந்தவர்கள் இவ்வார்த்தைப்படி செய்கிறார்கள்.

அன்பின் ஒருமனப்பாட்டிற்காக இகமதில் வாழ்ந்த இயேசு கிறிஸ்து சீடர்களுக்கு போதித்தது மட்டுமல்ல, அந்த போதனைக்கு உயிர் கொடுக்க கெத்சமனேயில் ஜெபித்தார் பாருங்கள் அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்க பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன். யோவான் 17:21-23. ஐங்கண்ட மானிடர்க்காய் அன்பின் பிதாவினிடம் அங்கலாய்த்து ஜெபித்தாரே பிதாவும் குமாரனும் தமது ஜனத்தில் இருக்கும் அற்புத ஒரு மன அன்பை உலகம் கண்டு கொள்ள மன்றாடினாரே. அவர் கூக்குரல் கெத்சமனேயின் கதறல் உன் ஐம்புலனில் கேட்கவில்லையா. உலகிலுள்ள ஒவ்வொரு மானிடர்க்காய் உத்தமர் தன் உயிரை தியாகமாக்கினாரே! எதற்காக? தமது ஜனம் கெட்ட கேட்டிலிருந்து குணப்படவல்லவோ? பரிசுத்த வேஷம் போட்டு பக்தர்களாய் பிரசங்கிகளாய், விசுவாசிகளாய் ஊழியர்களாய் கண்காணிகளாய் மூப்பர்களாய் வாழும் பரிசேய சதுசேய கூட்டங்களே மாயக்காரராகிய வேத பாரகரே! பரிசேயரே! உங்களுக்கு, ஐயோ! மனுஷர் பிரவேசியாதபடி பரலோக இராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள். நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை. பிரவேசிக்கப் போகிறவர்களை பிரவேசிக்க விடுகிறதுமில்லை. மத் 23:13. மற்றபுற ஜாதியார் மகிமையான இராஜ்யமாகிய மோட்சத்தை அறிய தெரிய போய் சேர வழியை பூட்டிக் கொண்டிருக்கும் புத்தி கெட்ட பணப்பிரியர்களே, பரிசுத்ததேவர் உங்களை ஏற்றுக் கொள்ளார். உலகில் இந்தியாவில் எத்தனையோ எண்ணுக்கடங்கா மக்கள் இயேசுவை அறிய வாஞ்சிக்கின்றனர். ஆனால் அயோக்கிய கிறிஸ்தவர்களால் ஒரு மனிதன் செய்யும் குற்றத்தால் எல்லாரும் இடறுக அடைந்து பின்னிட்டு போகின்றனர். ஐக்கியங்களில் தனிப்பட்ட வாழ்வில் நய வஞ்சகம் துரோகம் தாழ்ந்தோர்க்கு ஒரு சிறிய ஆலயம், உயர்ந்தோர்க்கு உயர்ந்த மேன்மையான ஆலயம். தன் ஜாதி இனம் வந்தால் தன்னுடன் மற்றவர்கள் வந்தால் வேறுவித உபசரிப்பு. இப்படிசெய்கிற சுய நல துரோக கிறிஸ்தவர்கள்

ஏனோக்கின் தேவனாகிய யெகோவாவிடம் வரமுடியாது. தேவ அழைப்பின்றி தேவ தரிசனமின்றி ஆத்தும பாரமின்றி வேலையில்லா திண்டாட்டத்தால் மனுஷர் தூண்டுதலால் வேதத்தை தெரியாமல் வாழ்க்கையின் குறிக்கோளுக்காக வாழ்ந்த அப்போஸ்தலர் காலத்தில் ஆத்தும தரிசனம் பெற்ற அப்போஸ்தலனாகிய பவுல் கடிந்து கொள்கிறார்.

அவர்களுடைய முடிவு அழிவு அவர்களுடைய தேவன் வயிறு அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே அவர்கள் பூமிக்கடுத்தவைகளை சிந்திக்கிறார்கள். பிலிப்பியர் 3:19 இன்றைய ஸ்தாபனங்களில் இதே காரியம் உண்மையாய் நடக்கின்றன. பூமிக்கடுத்தவைகள், பதவி, பட்டம், பணம், பொருள் இவைகளுக்காக சிந்தனையான சதி திட்டங்கள் தீட்டி பின் செயலில் நடத்துகின்றனர். படிக்கத் தெரியாத மக்கள் முன் ஆங்கிலத்தில் பேசுகின்றனர். Position பதவி Paise பணம் Property சொத்து இவைகளின் வழக்குகளால் எத்தனையோ கோடி கோடி பணம் கோர்ட்டுக்கும், காவல் துறையாளர்களுக்கும் போய் சேருகின்றன. பெருவயிற்று பெருச்சாளிகள் அடிவயிறு பெருத்த தொந்தியர்கள் பேரும் புகழும் விரும்பும் பச்சோந்திகள் முகங்களை கொழுப்பு மூடியிருக்கிறது. யோபு 15:27. கேயாசியை கேடான வழியில் ஏவின ஆவியும் அனனியாவை சப்பிராளை அந்தரங்க ஆவிகள் வஞ்சித்த வண்ணம் இன்றுள்ள எத்தனையோ கிறிஸ்தவ மக்களை ஊழியர்களை வஞ்சித்துக் கொண்டிருக்கின்றன. வானொலி ஊழியத்திற்கென்றும் வட இந்திய ஊழியத்திற்கென்றும் மலை வாழ் கிராம பணிக்கென்றும், அநாதி விடுதி, விதவைகள் விடுதிக்கென்றும் இன்னும் பல காரியங்களுக்காய் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வருமானத்தை சேகரித்து வயல்நிலம் வசதியான வீடு, மாளிகை விலையுயர்ந்த வாகனங்கள் வாங்கி கொண்டு வசதியாய் வாழ்க்கை அமைத்துக் கொண்டுள்ளனர். இந்தியாவில் எத்தனையோ எண்ணுக்கடங்கா மக்கள் மலைகளில், தொட்டிகளில், கிராமங்களில், குடிசை கூடாரங்களில் கொடிய நோயால் கடுமையின் பஞ்சத்தால்

உணவின்றி உடையின்றி உயிருக்காக போராடி கேட்பார் பார்ப்பாரின்றி மாண்டு மடிந்து போகின்றனர். கேயாசியே எங்கே இருந்து வந்தாய்? என்றுஎலிசா அவனை கேட்டதற்கு உமது அடியான் எங்கும் போகவில்லை என்றான். அப்பொழுது அவன் இவனைப் பார்த்து அந்த மனுஷன் உனக்கு எதிர் கொண்டு வர தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்புகிற போது என் மனம்உன்னுடன் கூட செல்லவில்லையா பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும்,ஒலிவத் தோப்புகளையும், திராட்சத்தோட்டங்களையும்,ஆடு மாடுகளையும்,வேலைக்காரரையும்வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா? ஆகையால் நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியையும் என்றென்றும் பிடித்திருக்கும் என்றான். II இராஜா 5:25,26 இந்த வீடு பாழாய் கிடக்கும் போது நீங்கள் மச்சு பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ ஆகாய் 1:4. ஆதி கிறிஸ்தவர்களே பரம்பரை கிறிஸ்தவர்களே மேலேயுள்ள வார்த்தை உங்கள் இருதய ஆழத்தில் பேசட்டும், ஆதியிலே தேவன் பன்னிரெண்டு கோத்திரத்தில் லேவி கோத்திரத்தை பிரித்தெடுத்தார். அவர்களுக்கு நிலமும் சொத்தும் எதுவும் இல்லையென்றும் நானே அவர்கள் சுதந்திரம் என்றார். ஆனால் இன்றைய லேவியர்கள் கேயாசியைப் போல் நாகமானின் நாச சொத்தை தேடி ஓடி வாங்கி திராட்சத் தோட்டம் கார், பங்களா, உலகில் உள்ளதெல்லாம் வாங்கியும் அரசுக்கு கணக்கு கொடுக்க மனதில்லாமல் வயிற்றிலிருக்கும் பிள்ளைக்கும் கணக்கு காண்பிக்கின்றனர். உடன் ஊழியருக்கும் வரும் உதவியை சரிவர தருவதை விட்டு வேதனைப் படுத்துகின்றனர். தேவ வார்த்தையை மறந்துவிட்டார்கள். போரடிக்கிற மாட்டை வாய் கட்டாதிருப்பாயாக, உபாகமம் 25:4 பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல்கொடுக்கக் கடவன். முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக் கடவன் ரோமர் 12:8.

அடியேன் இந்துவாய் இருக்கும் போது கிறிஸ்தவர்களை பற்றி பல நல்ல சாட்சி கூறுவார்கள். கிறிஸ்தவர்கள் சண்டை போட மாட்டார்கள். பொய் சொல்ல மாட்டார்கள், திருட மாட்டார்கள் என்பர். ஆனால் இன்றைய கிறிஸ்துவர்களிடம் இந்த சாட்சி கெட்டுப் போய் மாறாய் நடக்கின்றன. உத்தமமற்ற மக்கள் இருப்பதால் கிறிஸ்தவபேர் கெட்டு விட்டன.

தம்முடைய குமாரனும் நம்முடைய இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர். I கொரி 1:19. நாற்றத்திலிருந்தும் நாசத்திலிருந்தும் நீசத் தாழ்விலிருந்தும் இரட்சித்தவர் உண்மையுள்ளவர். அவரின் சீடர்களாய்,தொண்டர்களாய்,மக்களாய் வாழும் நாம் எப்படி இருக்க வேண்டும். அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிற எவனும் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும். I யோ 2:6 தூய தேவன் தமது திராட்சத் தோட்ட வேலைக்கு கூவி அழைக்கும் போது நியாயமான கூலி கொடுக்கிறேன் என்று நம் எஜமான் இயேசு கூறியுள்ளாரே மத்20:4. ஆனால் இன்று அநியாயமான கூலியை சம்பாதிக்கிறார்களல்லவா? மற்றும் சபைகளின் ஒழுங்கீனத்தை கண்ணால் கண்ட பவுல் ஆதி அன்பின் ஐக்கியமாயிருந்த அப்போஸ்தலர்கள் அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுவதிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள். அப் 2:42. அதே அப்போஸ்தலர்கள் காலத்திலும் பிரிவினை மார்க்க பேதங்கள் காணப்பட்டன. முதலாவது நீங்கள் சபையிலே கூடி வந்திருக்கும் போது உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன். உங்களில் உத்தமர்கள் இன்னாரென்றும் வெளியாகும்படிக்கு மார்க்க பேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே. I கொரி 11:18,19 பிரிவினை மார்க்க பேதம் அன்று கொரிந்திய கிறிஸ்தவர்களிலும் கொரிந்திய சபைகளிலும் காணப்பட்டது போல் இன்றும் உள்ளன: யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. கிறிஸ்துவுக்குள் ஆணென்றும் பெண்

அந்த பியூனின் காலை கழுவினார். உடனே அந்த பியூன் சொன்னார். ஐயா நீங்கள் என் காலை தொட வேண்டாம் என்றான். அப்போது அந்த மாவட்ட அதிகாரி சொன்னார். சகோதரரே நாம் இப்போது தேவ சமூகத்தில் எல்லாரும் ஒன்றே எனவே தேவ கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்றாராம். என்ன அருமையான தாழ்மை. அப்படிப்பட்ட உத்தமமான உண்மையும் தாழ்மையுமுள்ள தூய திறந்த மனதுடைய கிறிஸ்தவன் இந்தியாவில் இல்லாதது குறித்து வருந்துகிறேன். சகோதரரே நீங்களெல்லோரும் ஒரே காரி காரியத்தை பேசவும் பிரிவினைகளில்லாமல் ஏக மனதும் ஏக சிந்தையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன். I கொரி 1:10ஏனோக்கு எந்நிமிடமும் தன் தேவனாகிய யெகோவாவோடும் உடனுள்ள யாவரிடமும் தேவ அன்பில் ஐக்கியத்தில் ஒரு மனதாய் ஏக மனதுடனும் ஏக சிந்தையுடனும் தேவனோடு சஞ்சரித்தது போல நீங்களும் கர்த்தரில் சஞ்சரிப்பீர்களாக.

3. ஏனோக்கு நீதிமானாய் வாழ்ந்தான்

தேவனோடு தினமும் சஞ்சரித்த ஏனோக்கு தன் கண் முன் உள்ள யாவரிடமும் ஐக்கியமாய் அன்பாய் வாழ்ந்தவன் தேவ பார்வையில் நீதிமானாய் வாழ்ந்திருக்க வேண்டும். வேதத்தில் கூறப்படவில்லையென்பீர்கள். ஏனோக்கிற்குப் பின் வாழ்ந்த நோவா தேவ பார்வையில் நீதிமானாய் உத்தமனாய் வாழ்ந்ததால் தேவனிடமிருந்து, தேவனின் கண்களிலிருந்து கிருபையான இளைப்பாறுதல் தேவ கோபாக்கினையிலிருந்தும் உலக அழிவிலிருந்தும் கர்த்தரால் பெரிய மீட்பைப் பெற்றான். நோவாவின் நாட்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையைப் பாருங்கள். நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷ குமாரன் வரும் காலத்திலும் நடக்கும் எப்படியெனில் ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே

நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்தும், குடித்தும், பெண் கொண்டும், பெண் கொடுத்தும் ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக் கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள். மத் 24:37 38,39. ஓ இதை நினைத்தாலே பயங்கர அதிர்ச்சி. நோவாவின் நாட்களில் வாழ்ந்த மக்களின் குறை தேவ கோபத்தை, தேவ நியாயத்தை உணராதிருந்தது எத்தனை அறிவீனமும் புத்தியீனமுமானது. எத்தனையோ கற்பனை கட்டடம், கோபுரம் கட்டி இருக்கலாம். ஆனால் ஒரு இமைப் பொழுதில் முடிவு வந்ததே. அதே முடிவு அழிவு நாம் வாழும் உலகிற்கு சீக்கிரம் வரப் போகிறது. ஏனோக்கு நோவா எப்படி இவ்வாக்கினையிலிருந்து தப்ப உணர்ந்த வாழ்க்கை நடத்தி தேவனோடு சஞ்சரித்து ஐக்கியமாயிருந்து நீதிமான்களாய் நடந்தார்கள். நோவா வசித்த பூமியை தேவன் பார்த்தார். அது எப்படி இருந்ததாம்? பூமியானது தேவனுக்கு முன்பாக சீர் கெட்டதாயிருந்தது. பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. தேவன் பூமியைப் பார்த்தார். இதோ அது சீர்கெட்டதாயிருந்தது. மாமிசமான யாவரும் பூமியின்மேல் தங்களைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆதி 6:11,12. இப்பேர்ப்பட்ட பொல்லாத மிருககுண மக்கள் வாழ்விற்கு முடிவு வருமுன் கர்த்தர் நோவாவை நோக்கி நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள். இந்த சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன். ஆதி 7:1 தேவனின் ஆக்கினையை தண்டனையை உணராதிருந்து தங்களைக் கெடுத்துக் கொண்டு வாழ்ந்த மக்கள் எப்படி முடிவடைந்தார்கள்? நோவா நூற்றிருபது வருடம் தேவ அழைப்பைக் கூறினான். ஒருவராகிலும் குணப்படவில்லையே. தீர்க்கதரிசிகள் காலத்தில் நீதி சத்தியம் யதார்த்தம் வீதியிலே நின்றது. கொடுமை சீர்கேடல் அநியாயம் தலை விரித்தாடின. இதைக் கர்த்தர் பார்த்து நியாயமில்லையென்று விசனமுள்ளவரானார். ஏசா 59:13,14,15. அடுக்கடுக்காய் அநியாய செய்கையுள்ள மக்கள் வாழ்ந்தனர். ஆபிரகாம் லோத்துவின் நாட்களில் வாழ்ந்த மக்கள் நிலையைப் பார்த்தால் இதிலும் பயங்கர மோச செய்கை. நோவா நாட்களில் வாழ்ந்த மக்களின்

பூமியைப் பார்த்தார். ஆபிரகாம் லோத்து வாழ்ந்த சோதோம் கொமெரோவைப் பார்த்து அறிய இறங்கி வந்தார். ஆதி 18:20-33 வரை வாசியுங்கள். விளக்கிக் கூறினால் அதிக மாகும். துன்மார்க்கனோடே நீதிமானை அழிக்ககமாட்டார். தேவ தூதனிடம் ஆபிரகாம் சோதோம் கொமொரோவுக்காக பலமுறை மன்றாடி வேண்டுகிறான். கர்த்தர் பத்து நீதிமா னிருந்தாலும் அழிக்க மாட்டேன் என்றார். கர்த்தரின் தூதர்கள் ஆபிரகாமுடனே பேசின பின் போய்விட்டு மறுநாள் சாயங்காலத்திலே சோதோம் கொமொரோவுக்கு வந்தார்கள். ஆதி 19:1-28 வரை பார்த்தால் பயங்கரம். ஆதி 19:5-ல் பார்த்தால் தேவனே பொறுக்க சகிக்க முடியாத காரியம் செய்கின்றனர். இறுதியாக லோத்து தேவ பார்வையில் அருமையாயிருந்ததால் உன் ஜீவன் தப்ப ஓடிப்போ என்றார்கள். பின் இச்சையில் இழுப்புண்ட யாவரையும் ஒரு நிமிடத்தில் அக்கினி அழித்தது. என் அன்பர்களே, நம் தேவன் துன்மார்க்கனை நீதிமான் என்று தீர்க்க மாட்டேன். யாத் 23:7 என கூறியவர் அநீதிக்கு நீதியை சரிக்கட்டினார். நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே. கலா 2;16. பவுல் கலாத்திய தேச சபை மக்களின் அநீதியான கிறிஸ்தவர்களைக் கடிந்து எழுதினார். பேதுரு கூறுகிறார். நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? I பேதுரு 4:18. ஏனோக்கு நோவா ஆபிரகாம் லோத்து தேவ பார்வையில் நீதியாய் நடந்தார்கள். தங்கள் உடல் ஆத்தும சரீரத்தை கறைபடுத்தாமல் இச்சையடக்கமுள்ளவர்களாய் தேவ பயத்துடனும் நடுக்கத்துடனும் வாழ்ந்ததால் கிருபை இரக்கம் தயவு பெற்று கொடிய ஆக்கினையில் தப்பினார்கள். நீங்களும் உங்கள் குடும்பம் நீதியில் கர்த்தருக்கேற்ற சாட்சி யில் நீதியுள்ள சந்ததியாய் வாழ்வீர்களாக.

4. ஏனோக்கு உத்தமனாய் வாழ்ந்தான்

தூயாதி தூய தேவாதி தேவனான கர்த்தாதி கர்த்தரின் கண்களில் நீதிமானாய் உத்தமனாய் ஏனோக்கு வாழ்ந்ததால்

தேவ தயவை தேவ இரக்கத்தை தேவ கிருபையைப் பெற்று தன் குடும்பத்தைக் காத்துக் கொண்டார்கள். ஆதி 6:9 I பேதுரு 3:20. நம்முடைய குடும்பம் சந்ததியும் நோவாவின் குடும்பம் காக்கப்பட்டது போல் காக்கப்பட தேவனின் கண் களிலிருந்து கிருபை கிடைக்க, நோவாவைப் போல் நீதியாய் உத்தமனாய் நியாயத்திலும் நிதமும் நடக்க வேண்டும். நோவா அருமையான இளைப்பாறுதலை பெற நூற்றிருபது வருடம் அல்லல்களை தொல்லைகளை அனுபவித்து அனுதினமும் அலைந்து திரிந்து தேவனின் தீர்மானத்தை நிறைவேற்றினது போல் பகற்காலமிருக்குமட்டும் செய்ய வேண்டிய தேவ தொண்டை தேவ பணியை நற்சுவிசேஷத்தை கூற வேண்டும். பேழையில் அமரிக்கையான ஆறுதல் நிறைந்த இளைப் பாறுதலை தன் குடும்பமாய் பெற்றுக் கொண்டார் நோவா. தேவ அழைப்புக்கும் தேவ எச்சரிப்புக்கும் செவி கொடாத மக்கள் நிலை அலரல் கூக்குரல் கூச்சலை வெளியே கேட்டான். நோவாவின் பேழைக்குள் யாரும் வரவில்லையல்லவா? ஆபிரகாம் ஆண்டவரின் வாக்கை விசுவாசித்தும் வார்த்தை நிறைவேற தாமதமாகும் போது ஆபிரகாம் சோர்வும் தளர்ச் சியும் அடைந்து உத்தமத்தில் தவற நேரம் சமயம் நெருங்கும் போது கர்த்தர் ஆபிரகாமிடம் தரிசனமாகி நான் சர்வ வல்ல மையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு. ஆதி 7:1. ஆபிரகாமே, நீ வழிபட்ட விக்கிரக தேவர்களைப் போல் அல்ல; நான் சர்வ வல்லமையுள்ள தேவன் என்றார். அப்போது ஆபிரகாமை கர்த்தர் நோக்கி, நீ திரளான ஜாதிகளுக்கு தகப்பனாவாய். இனி உன் பேர் ஆபிரகாம் என்னப்படாமல் நான் உன்னை திரளான ஜாதிகளுக்கு தகப் பனாக ஏற்படுத்தினபடியினால் உன்பேர் ஆபிரகாம் எனப்படும். ஆதி 7:4,5. ஆபிரகாமை தேவன் ஒரு ஜன தகப்பனாய் கருதாமல் திரளான பல ஜன தகப்பனாய் ஆபிர காமை கர்த்தர் நினைந்தருளி உடன் படிக்கை செய்தவர் உண்மையாகவே செய்து முடித்தார். ஆபிரகாமின் சந்ததி களே, நீங்களும் எண்ணுக்கடங்கா ஆண்டுகளாய் விவாகம் ஆகி புத்திர வாசல் திறப்பின்றி அங்கலாய்த்து அவதிப்பட்டு அவமானம் உலகில் அடைகிறீர்களா? தேவன் கர்ப்பத்தை

அடைக்கிறவர்; திறக்கிறவர்; உருவாக்குபவர்; அழிக்கிறவர் அவர் ஒருவரே. அடிமையுங் கூட ஆபிரகாமைப் போல் விக்கிரக தேவர்களை விட்டு வல்லவராம் இயேசுவை பின் பற்றினேன். அலைந்து திரிந்த எனக்கு அமைதியான வாழ்க்கை ஏற்படுத்தினார். நான் கேட்டதெல்லாம் கொடுத்தார், எனது ஊழியத்திலும் பல பேர் புத்திரகனியின்றி இருந்தவர்கள் தேவ வார்த்தையை கூறினதால் பாக்கியம் பெற்றுள்ளனர். உங்கள் வீடு உங்கள் சந்ததி கட்டப்பட முன்னேற வேண்டுமானால் ஆபிரகாமைப் போல் தேவனிடம் தேவனுக்கு முன்பாக உத்தமர்களாயிருங்கள். உங்கள் விருப்பத்தை வாய்க்கப் பண்ணுவார். உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு கர்த்தர் நன்மையை வழங்காதிரார். சங் 84:11 உத்தமனுக்கு கர்த்தர் துணை. II நாளா 19:11 உலகில் உத்தம மார்க்கத்தாருக்கு உபத்திரவம் நெருக்கம் நிந்தை அவமானம் வெறுமை நேரிடலாம். உள்ளத்தை ஆராய்கிற உன்னதர் உத்தமத்திற்கு உறுதுணை கொடுக்கிறார். உத்தமத்தை கெடுக்க ஒரு நாள் யோபு மேல் கவனம் கொண்டான் சாத்தான். ஆனால் ஆண்டவர் கூறும் சாட்சியை பாருங்கள். என் தாசனாகிய யோபுவின் மேல் கவனம் வைத்தாயோ உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல் பூமியில் ஒருவனும் இல்லை என்றார் யோபு 1:8. உத்தம வழியில் நடக்கும் மனிதன் வாழ்விற்கு உபத்திரவம் சேதம் நஷ்டம் நிந்தை அவமானம் வந்தன. ஆனால் உத்தமத்தில் பரிசோதனையில் பரீட்சையில் வெற்றி காண வேண்டும். யோபு அனேக வார்த்தை கூறியும் தேவன் கூறிய சாட்சியை காத்துக் கொண்டதால் இரட்டிப்பான ஆசீர்வாதம் அடைந்தான். யோபுவின் உத்தமமான பொறுமை, சகிப்பு தன்மை நம்மிடம் வேண்டும். நம் கை கறை படாத வண்ணம் நம் இருதயம் மாசற்றதாய் நீதியிலும் உத்தமத்திலும் இருப்போமானால், தேவ பர்வதமாகிய பரலோகில் வாசம் பண்ண முடியும். சங் 15:2 அடிமைத்தன வாழ்விலிருந்து அமைதியின் வாழ்வுதர ஆறு லட்சம் மக்களை அன்று நடத்தினார். அந்த ஆறு லட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்றி ஐம்பது பேரும் அந்த தேசத்தில் வாசம் பண்ணவில்லை.

உத்தம ஆவியையுடைய காலேப் யோசுவா மட்டும் பிரவேசித்தனர். துர் செய்தி பரப்பினவர்களும் துன்மார்க்கமாய் இச்சையில் இழுப்புண்டு தேவனை பரீட்சை பார்த்த ஆறு லட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று நாற்பத்தெட்டு பேரும் வனாந்தரத்திலே பிரேதங்களாய் பிணங்களாய் மாண்டார்கள் மடிந்தார்கள். இன்றைய கடைசி நாட்களிலும் கிறிஸ்தவ ஊழியர்கள் விசுவாசிகள் உலகத்துடனும் தேவனிடமும் தொடர்பு கொண்டு ஏனோதானோ என்று அனலுமின்றி, குளிருமின்றி வாழ்கின்றனர். எண் 1:46ல் பிரயாணம் செய்த தொகை 603550, பிரவேசித்ததோ இருவர் மட்டும் எண் 14:30 மீதி 603548 பேர் என்ன ஆனார்கள்? I கொரி 10ம் அதிகாரத்தை பாருங்கள். ஆண்டவராகிய இயேசு சொன்னார் அழைக்கப்பட்டவர் அநேகர். ஆனால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களோ ஒரு சிலர் என்றார். உலகில் சபைகளில் கிறிஸ்தவர்களாய் அழைக்கப்படும் கிறிஸ்தவர்கள் அநேகருண்டு. ஆனால் தெரிந்து கொள்ளப்பட்ட திருந்திய மக்கள் மிகமிக குறைவு. காலேப் யோசுவா உத்தமமான திருந்திய உண்மை மக்களாய் இருந்ததால் பாலும் தேனும் ஓடும் கானான் தேசத்தில் பிரவேசித்தார்கள். ஏனோக்கு எடுத்துக் கொள்ளப் பட தேவன் ஏற்றுக் கொள்ள நோவா தன் மனைவி மக்களாய் எட்டுப் பேர் பேழையில் பிழைக்க ஆபிரகாம் பலஜன தகப்பனாக காலேப் யோசுவா கனி நிறைந்த கானான் தேசத்தில் வாசம் பண்ண உத்தம வாழ்க்கை செய்தார்கள். உத்தமனாய் நடக்கிறவன் இரட்சிக்கப்படுவான். மாறுபாடான இரு வழியில் நடக்கிறவனோ அவற்றில் ஒன்றில் விழுவான். நீதி28:18 உத்தமமுள்ள ஊழியக்காரன் தன் எஜமானிடம் உண்மைக்கேற்ற பலனை பெறுவானல்லவா? நம் அருமை எஜமான் இயேசு கூறிய உவமையை பார்க்கவும் மத் 25;11,23 லூக்கா 19:17 உத்தமமான ஊழியக்காரனே என்றார். உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ உத்தமனாயிரு உபா 8:13 கர்த்தர் உங்கள் குடும்பத்தை ஊழியத்தை தொழிலை வேலியடைத்து, தமது தூதர்களால் காத்துக் கொள்ள உத்தமர்களாயிருப்பீர்களாக.

5. ஏனோக்கு பிறரை எச்சரித்து வாழ்ந்தான்

அகோரமான அடிமை வாழ்விலிருந்து அன்பின் தேவன் தமது நாமம் விளங்க தெரிந்து கொண்ட தேவ ஜனமாகிய இஸ்ரவேல் சந்ததியை மோசே யோசுவா தீர்க்கதரிசிகள் மூலம் பக்தியான பரிசுத்த வழியில் நடத்தி வந்தார். பலமும் பெலமும் கொண்ட இஸ்ரவேலரின் எதிரிகளை பரிசுத்த தேவன் நிர்மூலமாக்கி ஆதி முற்பிதாக்களுக்குக் கூறிய வாக்குப்படியே நடத்தினார். இச்சமயம் இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணி எரிகோவின் கிட்ட இருக்கும் யோர்தானுக்கு இக் கரையிலே மோவாபின் சமனான வெளியில் பாளயமிறங்கினார்கள். அப்போது சிப்போரின் குமாரனாகிய பாலாக் என்ற மனிதன் ஆசீர்வதிக்கப்பட்ட தேவஜனத்தை அவர்களது ஐக்கிய அன்பை ஒற்றுமையான ஒரு மனப்பாட்டை அறிந்து அவர்களை சபிக்க கூலி பேசி ஒரு ஆள் பிடித்தான். அவன் ஓர் தேவ மனிதன். அவர் பேர் பிலேயாம். இவனிடம் மோவாபிய ராஜா கூறுகிறான். இஸ்ரவேல் ஜனங்கள் மாட்டைப்போல பலமும்திரளுமாய் வந்துள்ளனர். மாடு வெளியின் புல்லை மேய்கிறது போல இப்பொழுது இந்த கூட்டம் நம்மை சுற்றியிருக்கிற யாவையும் மேய்ந்து போடும் என்றான். இதற்கு உடனடி நிவாரணமான முடிவு காண பிலேயாமை அழைத்து எகிப்திலிருந்து ஒரு கூட்டம் வந்திருக்கிறது. அவர்களை சபிக்க வேண்டும் என கூலி கொடுத்தான். அந்நியனின் ஆதாயத்தை ஆசித்து ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியை சபிக்க பிலேயாம் போகிறான். தேவ ஜனத்திற்கு வழி காட்டியும் தீர்க்கதரிசியுமான தேவ மனிதனே தவறான வழியில் போனதால் தேவாதி தேவன் தமது தூதனைக் கொண்டு தடுத்து கழுதையின் வாயை திறந்து உருவின பட்டயத்தோடு எச்சரிக்கிறார். கர்த்தருடைய தூதனானவர் அவனை (பிலேயாமை) நோக்கி நீ உன் கழுதையை இதனோடே மூன்று முறை அடித்ததென்ன? உன் வழி எனக்கு மாறுபாடாயிருக்கிறதினால் நான் உனக்கு எதிரியாக புறப்பட்டு வந்தேன். எண் 22:32 புத்தி கெட்ட பிலேயாம் பணத்திற்காக, பரிசுத்த தேவனின் வரங்களை கிருபைகளை

மகிமைகளை இழக்க நேரிட்டன. மட்டுமல்ல, அவன் மனதை தேவனிடமில்லாமல் மாயமானதின் மேல் வைத்தான். இன்று பிலேயாமைப் போலுள்ள ஊழியர்கள் வாழ்வில் இதே காரியம் நேரிடுகின்றன. என் அன்பர்களே, நாம் போகும் வழி பிரயாணம் உழைக்கும் உழைப்பு, அலையும் அலைச்சல், எதற்காக எங்ஙனம் செய்கிறோம்? ஆதாயத்தை ஆஸ்தியை ஆசித்து வெளியில் தேவ மக்கள் முன் பண ஆசை பற்றி பேசி பிரசங்கித்து விட்டு தனிப்பட்ட வாழ்வில் பிலேயாமைப் போல் செய்வீர்களானால் உங்கள் வழி உங்கள் ஊழியம் தேவனின் கண் முன் மாறுபாடாய் தாறுமாறாய் காணப்படும். அடுத்து ஆதாயத்தை தேடின மனிதன் கேயாசி இவன் தேவ மனிதனாகிய எலிசாவின் ஊழியக்காரன். II இராஜா 5:20, 27. தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின் வேலைக்காரன் கேயாசி என்பவன். அந்த சீரியனாகிய நாகமான் கொண்டு வந்ததை என் ஆண்டவன் அவன் கையிலே வாங்காமல் அவனை விட்டு விட்டார். நான் அவன் பிறகே ஓடி அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன் மேல் ஆணையிட்டு நாகமானை பின் தொடர்ந்தான். தேவ மனிதனோடு வசித்த வாழ்ந்த கேயாசி அற்ப பொருள் மேல் ஆசை கொண்டு அருமையான ஜீவ வாழ்வை வெறுத்து நாகமானை பின் தொடர்கிறான். இந்தியாவில் இன்று எத்தனையோ கேயாசிகள் நாகமான்களை நாடுகின்றனர். தீர்க்கதரிசிகள் கூறும் வண்ணம் பொருளாசை விஷயத்தில் ஆசாரியர்கள் முந்தினவர்களாய் கறைப்பட்டு உள்ளனர் என கூறுகின்றனர். சாமுவேல் தீர்க்கதரிசி தான் அவனின் குமாரர் பொருளாசையுடையவர்களாய் மாறினதால் இஸ்ரவேல் மக்கள் இராஜா வேண்டும் என்று கேட்டனர். முதலாவது மேய்ப்பன், கண்காணி, மூப்பர், பக்தியுள்ள தேவ பயமுள்ள பரிசுத்தமுள்ள வழியில் குடும்பம் குழந்தைகளுடன் நடந்தால்தான் கர்த்தரின் மந்தைகள் நல்வழியை பின்பற்றும். இல்லாவிட்டால் தாவி தாவி இடம் விட்டு இடம் ஆடுகள் சிதறும் மேய்ப்பனுக்கும் மேன்மை சமாதானம் அடைய முடியாது. ஆடுகளும் சமாதானம் பெற முடியாது. பாருங்கள், தாவீது கர்த்தருடைய இருதயத்திற்கேற்ற மனிதன்தான். ஆனால் அவரின் நாமத்

திற்கே தூஷணத்தையும் தேடி தந்தான். இந்த காரியத்தி
னாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமா
யிருந்த படியினால் உனக்கு பிறந்த பிள்ளை நிச்சயமாய் சாகும்
என்று சொல்லி நாத்தான் வீட்டுக்குப் போய் விட்டான்
II சாமு 12:14 தாவீதின் தைரியமான செயல்களை நாம்
மெச்சலாம். தாவீதின் தவறோ பெரியது. இன்றைய கிறிஸ்
தவ வாழ்க்கைக்கு இப்படிப்பட்ட தேவ எச்சரிப்பு இல்லாத
தால் சுக போகத்திலும் சுதந்திரமாய் பாவமாம் கடலில்.
மகிழ்ந்து களி கூறுகிறார்கள். தாவீதே, நீ செய்த தவறால்
தேவாதி தேவன் யெகோவாவின் நாமத்திற்கு தூஷணம்.
தேடினதால் எவ்வளவு அறிவீனம் ஆகிவிட்டாய்.
தாவீதைப் போல் இன்றைய தேவதாசர்கள் வளர்த்த ஆடு
களையும் ஆட்டின் குட்டியையும் கொன்று விபச்சார வெறி,
வல்ல தேவனின் ஆக்கினையை அறிய இயலாமல் செய்கின்
றன. உங்களை நீங்களே நிதானித்து உங்கள் வேலை, உங்கள்
அந்தஸ்து, உங்கள் நிலைமையை அறிந்து செயல்படுங்கள்.
ஊழியர்கள் விசுவாசிகள் பிரதிஷ்டையில் பின்னடைந்த
பிலேயாம் போல் பண ஆசை கடலில் பதறி அந்தரங்க
இச்சையில் அடிமையான கேயாசி, தாவீது போல் தன் பேரன்
யூத ராஜா எசேக்கியேலின் தனிப்பட்ட வாழ்வின் பெருமையை
தனக்கிருக்கும் காரியத்தை பாபிலோனிய ராஜாவாகிய
பெரோதாக் பலாதான் அனுப்பிய வெகுமானத்தை ஏற்றுக்
கொண்டு அவனின் ஊழியர்களை அங்கீகரித்து அவனோடு
உடன்பாடு கொண்டு தனக்குள்ளதெல்லாவற்றையும் அந்நிய
னிடம் உள்ள அரண்மனை மற்றும் அத்தனையையும் காண்பிக்
கிறான். II இராஜா 20:16-18. எசேக்கியேலே யெகோவாகிய
தேவனின் அறிவு சிந்தை வேறு பிரிக்கப்பட்ட வாழ்வில்
உன்னில் இல்லையே. உலகத்தோடும், பாவத்தோடும்,
பிசாசோடும் ஐக்கியம் கொண்டு உன் அந்தஸ்தான வாழ்வை
இழந்து விட்டபோது ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியாவை
நோக்கி கர்த்தருடைய வார்த்தையைக் கேளும். இதோ
நாட்கள் வரும். அப்பொழுது உமது வீட்டில் உள்ளதிலும்,
உமது பிதாக்கள் இந்நாள் வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும்
மீதியாக வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக்

கொண்டு போகப்படும். நீ பெறப் போகிற உமது சந்தான
மாகிய உமது குமாரர்களிலும் சிலர் பாபிலோன் அரண்மனை
யிலே வேலைக்காரராயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லு
கிறார் என்றான். இவ்வார்த்தைகளைக் கேட்டும் என் நாட்களில்
சமாதானமும், உண்மையும் இருக்குமே என்றான். என்ன
நிலைமை பாருங்கள்! எசேக்கியேலின் பெருமையின் தவறால்
பின் சந்ததிக்கு பாரமான வேதனை வாழ்வைத் தேடி
வைத்தான். சிம்சோன் கண் இச்சையால் நசரேய பிரதிஷ்டை
வாழ்வை இழந்து தெலீலாளிடம் தெளிவாய் தெய்வ வரத்தை
தெரிவித்ததால் முடி கத்தரிக்கப்பட்டு, கண் பிடுங்கப்பட்டு
மாவரைத்தான். கிறிஸ்தவர்களே! உங்கள் பிள்ளைகளை,
மனைவிகளை, சகோதர சகோதரிகளை ஞானமாய் தேவ வழியில்
நடத்துங்கள். வீட்டிற்கு வரும் புற ஜாதி வாலிப ஆண்கள்
பெண்களிடம் நிதானமாய்ப் பழகச் சொல்லுங்கள். அடங்காத
வாலிபப் பிள்ளைகளைக் கர்த்தருக்குள் சத்திய வார்த்தையால்
எச்சரித்து வளர்ப்பீர்களாக. எசேக்கியேல் ராஜா குடும்பத்
தலைவனும் கூட. அடுத்ததாக தேசத்திற்கு ஒரு காவலாளன்.
கேபார் நதியண்டையில் சிறைப்பட்டிருக்கும் போது தேவ
தரிசனங்களையும் கண்டான். மனுபுத்திரனே, உன்னை இஸ்ர
வேல் வம்சத்தாருக்கு காவலாளனாக வைத்தேன். நீ என்
வாயினாலே வார்த்தையைக் கேட்டு என் நாமத்தினாலே
அவர்களை எச்சரிப்பாயாக. எசே 3:17 தேவ ஆலயத்திலே
ஐக்கியங்களிலே தேவ வார்த்தையை தேவ ஆலோசனைகளைக்
கேட்பது மட்டுமல்ல தன் வாழ்வில் பரிசுத்தமாய் வாழ்ந்து
விட்டு கெட்டுக் கொண்டிருக்கும் தன் சகோதர, சகோதரிகளை
பிள்ளைகளை எச்சரிக்காமலிருக்கக் கூடாது. குணப்பட்ட ஒரு
மனிதன் தனது குடும்பத்திற்கும், ஊருக்கும், சந்ததிக்கும்,
சபைக்கும், நாட்டுக்கும் காவலாளன் எப்பொழுதும்
எச்சரிக்கையாயிருக்க வேண்டும். மற்றவர்களையும் எச்சரிக்க
வேண்டும். மனுபுத்திரனே, நான் உன்னை இஸ்ரவேல்
வம்சத்தாருக்குக் காவல்காரனாக வைத்தேன். ஆகையால் நீ
என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு என் நாமத்தினாலே
அவர்களை எச்சரிப்பாயாக; நான் துன்மார்க்கனை நோக்கி
துன்மார்க்கனே, நீ சாகவே சாவாய் என்று சொல்லுகையில்

நீ துன்மார்க்கனை தன் துன்மார்க்கத்தால் இராதபடி எச்சரிக்கத்தக்கதாக அதை அவனுக்கு சொல்லாமற்போனால் அந்தத் துன்மார்க்கன் தன் அக்கிரமத்திலே சாவான். ஆனாலும் அவன் இரத்தப் பழியை உன் கையிலே கேட்பேன். துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பும்படி நீ அவனை எச்சரித்தும் அவன் தன் துன்மார்க்க வழியை விட்டுத் திரும்பாமற் போனால் அவன் தன் அக்கிரமத்திலே சாவான். நீயோ உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய். எசே 33:7,8,9. தேவாதி தேவன் தமது தூதனுக்கும் கொடாத பெரிய கனமான மகிமையுள்ள பொறுப்பை மானிடர்கள் கையில் ஒப்புவித்துச் சென்றுள்ளார். நமது ஆத்தும வாழ்வில் வளர்ச்சி இன்றி ஏதோ ஆண்டில் ஒரு நாள், இரு நாள் ஆலயம் சென்று ஆண்டு காணிக்கை கொண்டு வந்து வேறு பல ஊழியங்களுக்கு உதவி செய்து தான தர்மம் பேர் விளங்க என்ன செய்தாலும் அதை தேவன் அங்கீகரியார். இன்றைக்கு அனேக பிரசங்கிமார்கள், ஊழியர்கள் பாலிசாக போதனை கூறி பணம் கிடைப்பதால் என்ன தவறு செய்தாலும் கர்த்தர் அன்பாயிருக்கிறார், பாவங்களை மன்னிப்பார், மறப்பார் கடலின் ஆழத்தில் போட்டு, நினையாதிருப்பார் என்கின்றனர். யார் மீது தேவன் அன்பாயிருக்கிறார், யார் எப்படிப் பட்டவர்களின் பாவங்களை மன்னிக்கிறார் சிந்திப்போம். அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியை கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடுதியில் நாசமடைவான். நீதி 29:1 மழுங்கிப் போன ஆயுதமாய் மாறிக் கொண்டிருக்கும் பூர்வீக சொந்த ஜனமே, கர்த்தரின் நியாயத் தீர்ப்பு சமீபம் துன்மார்க்க பின்மாற்ற கிறிஸ்தவர்களே, அகங்காரங் கொண்ட அக்கிரம கிறிஸ்தவர்களே மனந் திரும்புங்கள். அதிபதியானவன் பொய்களுக்கு செவி கொடுக்கும்போது அவனுடைய ஊழியக்காரர் யாவரும் துன்மார்க்கராவார்கள். நீதி 29:12. அதிபதியாகிய ஏரோது அநீதியில் தேவனின் நியாயப் பிரமாணத்தை மீறி தன் சகோதரன் மனைவியை வைத்துக் கொள்வது நியாயமல்லவென்று நீதியும் பரிசுத்தமுமுள்ள தேவ ஊழியன் யோவான் கூறினார். மாற் 6:17,18. ஒரு சமுதாய தலைவனே இராஜாவே நீதியிலிருந்து தவறினால்

அவன் ஊழியர்கள் பிள்ளைகள் எப்படி இருப்பார்கள் இன்றைக்கு ஆவிக்குரிய உலகில் பார்ப்போமானால் அன்றைய ஏரோதுவைப் போல் இன்றைக்கு அனேக ஊழியர்கள் விசுவாசிகள் வாழ்க்கை கேவலமாய் நடக்கின்றனர். நேரில் கண்டு கர்த்தர் வார்த்தைப்படி கூறினால் தாவீதுக்கு, சாலமோனுக்கு எத்தனை மனைவிமார்கள் மறுமனையாட்டிகள் இருந்தனர். தேவன் அதை அனுமதிக்கவில்லையா என்று தர்க்கம் செய்கின்றனர். தாவீதின் சாலமோனின் காலம் வேறு; இப்போதுள்ள காலம் வேறு வேறு. குணப்படாத மானிடர்களைக் கர்த்தர் காரிருளான அந்தகார நரக ஆக்கினைக்கு இரையாக வைத்திருக்கிறார். யூதாவே, குணப்படாத கிறிஸ்தவர்களே, பின்மாற்றக்காரரே உனக்கு ஒரு அறுப்புக்காலம் (நியாயத் தீர்ப்பு தேவதண்டனை) காத்துக்கொண்டிருக்கிறது, நியமிக்கப்பட்டிருக்கிறது. ஓசி 6:11 அனுக்கிரக காலமாய், கிருபையின் காலமாகிய இந்நாளிலே ஏனோக்கு, தேவதூதன், நாத்தான்ஏசாயா, ஏசேக்கியேல் யோவானைப் போல் துன்மார்க்க ஜனத்தை அக்கிரமக்காரரைக் கர்த்தரிடம் திரும்பும்படி எச்சரிப்பீர்களாக.

6. ஏனோக்கு எப்பொழுதும் கர்த்தரை முன்பாக வைத்து வாழ்ந்தான்

ஏனோக்கிற்கு எத்தனையோ எதிரிகள், பகைஞர்கள். விரோதிகள் இருந்திருக்கலாம். எவருக்கும் அஞ்சாமல் யெகோவாவை வாழ்வில் முன்பாக, கேடகமாக, துணையாக, தினமும் துதியினாலும், ஸ்தோத்திரத்தினாலும் வணங்கி வாழ்ந்தார். தேவனே ஏனோக்கை எடுத்துக் கொண்டார். ஏனோக்கின் பின்வாரிசான இஸ்ரவேலர் எகிப்தின் ராஜாவினிடம் அடிமையிலும் அவனது ஆதிக்கமாகிய அதிகாரத்திலும் கட்டப்பட்ட கஷ்டத்தில் வாழ்ந்தனர். தமது ஜனத்தின் கூக்குரலைக் கண்ணீரைக் கதறலைக் கண்ட கேட்ட கர்த்தர் மோசேயோடு கூறி என் ஜனத்தை பிரித்துவிட எனக்கு ஆராதனை செய்ய பார்வோனிடம் பேச போ என்றார். ஆனால்

மோசே எனக்கு பலமும் பெலமும் இல்லையே. இந்த ஜனங்கள் என்னிடம் அடையாளம் கேட்பார்களே என்றான். கர்த்தர் சொன்னார். அதற்கு அவர் என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும்; நான் உனக்கு இளைப்பாறுதலைத் தருவேன் என்றார். யாத் 33:14. கர்த்தரின் சமூகம், வல்லமை, கிரியை, அற்புதம் உங்களுக்கு முன்பாகச் செல்லும். உங்கள் எதிரிகளை அவர்கள் சக்தி ஆயுதங்களை சதி ஆலோசனைகளை அதம்பண்ண வல்லவர். உங்கள் முன் இருப்பதால் உங்கள் வாழ்வில் பயம் வேண்டாம். வாக்கு பண்ணிய வளம் பொருந்திய தேசத்திற்கு வல்லவர் வழி நடத்தும்போது அவர்கள் கர்த்தருடைய, பர்வதத்தை விட்டு மூன்று நாள் பிரயாணம் போனார்கள். மூன்று நாள் பிரயாணத்திலும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி அவர்களுக்கு இளைப்பாறும் ஸ்தலத்தைத் தேடிக் காட்டும்படிக்கு அவர்கள் முன் சென்றது. எண் 10:33 என் அருமை தேவ சந்ததியே, உங்கள் முன் வழிகாட்டுகிறவர் கூட்டிச் செல்வார். ஆனால் நீங்கள் அவர் வழியை, அவர் வல்லமையை அறிந்து அவர் பின் சென்றால் மாறாத உடன்படிக்கையான வார்த்தை வல்லமையுள்ள ஜெயமுள்ள பலம் உங்களுக்கு இளைப்பாறுதல் அமைதல், ஆறுதல் தர முன் செல்லும். அப்போது அமரிக்கையும் ஆனந்தமுமான வாழ்வை அடைவீர்கள். ஆதி இஸ்ரவேலர்க்கு ஆண்டவர் இரவில் அக்கினியிலும் பகலில் மேகத்திலும் உங்களுக்கு முன் சென்றாரே உபா 1:33. உங்கள் வாழ்க்கையாகிய பிரயாணத்தில் இரவில் இருளை நீங்கள் கண்டு கலங்காமலிருக்க அக்கினியாகவும் பகலில் நீங்கள் சோர்ந்து பெலவீனமடையாமலிருக்க நிழலாகவுள்ள மேகமாகவும் உங்களின் பாதம் வைக்கும் இடமெல்லாம் உங்கள் முன் செல்பவர் உங்கள் தேவனாகிய கர்த்தரே. இவ்வனாந்திர பிரயாணத்தில் அசந்து, அயர்ந்து தளர்ந்து விடாதீர்கள். எதிரிகள் உங்கள் முன் ஏழு வழியாய் ஓட செய்பவர். உன் சிருஷ்டிகராகிய கர்த்தரே உன் தேவனாகிய கர்த்தர் தாமே உனக்கு முன்பாகக் கடந்து போவார். அவரே உனக்கு முன்னின்று அந்த தேசத்தை அழிப்பார். நீ அவர்கள் தேசத்தை சுதந்தரிப்பாய். கர்த்தர் சொன்னபடியே யோசுவா உனக்கு முன்பாகக் கடந்து

போவான். உபா 31:3 ஜீவனும், தீர்க்காயுசுமானவரான சர்வ வல்லவர். உங்கள் வாழ்க்கையின் எதிரிகளை அழிப்பவர். உங்கள் வாழ்க்கையில் தேசம், ஊர், உறவினர், நண்பர், உடன் வேலை செய்பவர்கள் அருகிலிருப்பவர்கள் எதிர்ப்பாயுள்ளனரா? வியாதி, வறுமை, எதுவானாலும் யாரையானாலும் கர்த்தர் நீக்குபவர். உங்கள் வாழ்வோ அவருக்குப் பிரியமாயிருக்க வேண்டும். அப்போது உங்கள் முன் அதிசயம் செய்வார். கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர். அவர் உன்னோடே இருப்பார். அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றார். உபா 31:8. உங்களுக்கு முன்பாக போகிறவர். உங்களுடனிருப்பதால் பயம், கலக்கம், கொள்ளாமல் பெலன் கொண்டு திடமாய் தைரியமாய் துதிக்க வேண்டும். அப்போது உங்கள் பிரச்சனை, பாடு, கட்டுகள் தடைகள் எதிர்ப்புகள், கஷ்டங்கள் யாவும் முறிந்தோடும். மோசேயின் சீஷனாகிய யோசுவாவுக்கு கர்த்தர் கூறியதை பாருங்கள். நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை. நான் மோசேயோடே இருந்தது போல உன்னோடும் இருப்பேன். நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை. உன்னை கைவிடுவதுமில்லை யோசுவா 1:5 கர்த்தாதி கர்த்தர் ஒரு மனிதரிடம் இருப்பாரானால் எதுவும் எவரும் எதையும் செய்ய முடியாது. யோசுவாவே, நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முண்பாக எதிர்த்து நிற்பதில்லை என திடமும் தைரியமுமான வார்த்தையை நம்மில் உறுதுணையாய் கைகொள்வோம். ஜனங்களை நோக்கி நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியையும் அதை சுமக்கிற லேவியராகிய ஆசாரியர்களையும் கண்டவுடனே நீங்களும் உங்கள் இடத்தை விட்டு பிரயாணப்பட்டு அதற்கு பின் செல்லுங்கள். கிறிஸ்தவ வாழ்க்கை இன்றும் உலகம், மாமிசம், பிசாசால் கறை பட்டுள்ளன. யோசுவா கூறியதை கவனமாய் பின்பற்றுங்கள். கிறிஸ்தவ சபையில் ஊழியர்கள் பின் செல்லாத மக்கள் வாழ்வில் தோல்வி. என் அன்பர்களே, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கிற லேவியருக்கு பின் கர்த்தர் முன்

பாக செல்ல நீங்கள் பின் செல்லுங்கள். யோவான் கூறுகிறார். அவர் பெருக, நான் சிறுக என்கிறார். அகிலத்திற்காய் ஜீவனை உயிரை தியாகமாய் ஜீவ பலியாய் அற்புதமான சரீரத்தில் ஓடிய உயிராகிய அருமையானஇரத்தத்தைசிந்தியவர், மரணம் பிசாசு பாதாளத்தைஜெயித்து உயிரோடெழுந்தவரான நசரேயனாகிய இயேசுவின் நாமம் வளர விரிவடைய பாடுபடுவோம், ஜீவிப்போம். கர்த்தரின் ஊழியர்கள் ஜனங்களுக்கு முன்னே செல்லும் போது கர்த்தர் கிரியை செய்வார். பின்பு யோசுவா ஆசாரியர்களை நோக்கி. நீங்கள் உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக் கொண்டு ஜனங்களுக்கு முன்னே நடந்து போங்கள் என்றான். அப்படியே உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக் கொண்டு ஜனங்களுக்கு முன்னே போனார்கள். யோசுவா 3:6 கிருபை தாலந்து வரம் பெற்ற ஊழியர்கள் ஜனங்களுக்கு பின் செல்லாமல் முன்னே போக வேண்டும் என யோசுவா கூறியபடி ஊழியத்தில் உயர்வீர்களாக. இதோ சர்வ பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறவருடைய உடன்படிக்கைப் பெட்டி உங்களுக்கு முன்னிலே யோர்தானிலே போகிறது. யோசுவா 3:11. உன்னதரின் வார்த்தையாகிய வல்லமையான பொக்கிஷமாகிய உடன்படிக்கைப் பெட்டி உங்கள் முன்னே யோர்தானிலே போகிறது. யோர்தான் நதியாகிய தண்ணீரை ஆழத்தை கீழே பாராமல் யோசியாமல் சிந்தியாமல் உங்களுக்கு முன் செல்பவருடன் நம்பிக்கையான தேவ நினைவோடு போக வேண்டும். தேவ வல்லமையை பராக்கிரமத்தை பார்த்தும் கண்டும் இருந்த இஸ்ரவேல் மக்கள் கிபியோனியரையும் அதன் மனுஷரையும் பார்த்து மிகவும் பயந்தார்கள், கர்த்தர் யோசுவாவை நோக்கி அவர்களுக்கு பயப்படாயாக. உன் கைகளில் அவர்களை ஒப்புக் கொடுத்தேன். அவர்களில் ஒருவனும் உனக்கு முன்பாக நிற்பதில்லை என்றார் யோசுவா 10:8 பூலோகமதை பார்த்தால் பலம் வராது பரலோகமாகிய பரமனின் ஒத்தாசை உதவியை அவர் அனுக்கிரகத்தை நாடுவோம். அப்போது நம் எதிரிகளான கிபியோனியரை நம் கையில் கர்த்தர் ஒப்புக் கொடுப்பார். கர்த்தருடைய இருதயத்திற்கேற்ற தாசனாகிய தாவீது தைரியமுள்ளவன். ஆனால் எதிரிகள் விஷயத்தில் தன் தேவ

னாகிய கர்த்தரிடம் விசாரியாமல் போகவே மாட்டான். பெலிஸ்தர் திரும்பவும் வந்து ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே இறங்கினார்கள். தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்ததற்கு நீ நேராய் போகாமல் அவர்களுக்கு பின்னாலே சுற்றி முசுக்கட்டை செடிகளுக்கு எதிரேயிருந்து, அவர்கள் மேல் பாய்ந்து, முசுக்கட்டை செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலைக் கேட்கும் போது சீக்கிரமாய் எழும்பிப்போ அப்பொழுது பெலிஸ்தரின் பாளயத்தை முறியடிக்க கர்த்தர் உனக்கு முன்பாக புறப்பட்டிருப்பார் என்றார். II சாமு5:23,24 பெலிஸ்தரை வெல்ல பூலோக ஆயுதத்தாலும் உலக மனித யோசனையாலும் வெல்லாமல் கர்த்தர் யோசனையின்படி செய்ததால் தாவீது ஜெயித்தான். இதன் மகிமையைதான் தாவீது கூறுகிறான். "கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. ஆகையால் என் இருதயம் பூரித்தது." சங் 16:8 என் அருமையானவர்களே, நாம் எழும்பி ஆயத்தமாய் செயல்படும் போது கர்த்தர் நமக்கு முன் புறப்பட்டு செயல்பட்டு ஜெயத்தை வெற்றியை நம்மில் காண செய்வார். திடனற்ற தைரியமற்ற தேவ ஜனமாம் இஸ்ரவேலர்க்கு கர்த்தர் தீர்க்கதரிசியாகிய ஏசாயாவைக் கொண்டு கூறியதைப் பாருங்கள். நீங்கள் தீவிரித்துப் புறப்படுவதில்லை. நீங்கள் ஓடிப் போகிறவர்கள் ஓடிப் போவதுமில்லை; கர்த்தர் உங்கள் முன்னே போவார். இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களை காக்கிறவராயிருப்பார். ஏசா 52:12 உங்கள் முன்னே போகிறவர் பிறகே காக்கிறவர் வலது புறம் இடது புறமிருக்கிறவர் உங்களை சுற்றிலுமிருப்பார் என வேதம் கூறுகிறது. அப்படிப்பட்ட அதிசயமானவர் ஆண்டவர் இயேசுவுடன் வாழ்ந்த சீஷர்கள் சமுத்திர பிரயாணமதில் வாழ்வாகிய படகிலே வல்லவரான மாலுமியாகிய மகிபரை படகின் பின்னணியத்தில் தலையணை கொடுத்து உறங்க வைத்தனர். சமுத்திர அனுபவமும் நீந்தும் திறமை கொண்டவர்களாங்காய் படகையோட்ட தெரிந்த பலசாலிகள் நடு இரவில் புயலும் காற்றும் கொந்தளிப்பும் ஏற்பட அவர்கள் மாமிச யோசனை மனித ஞானம் சமுத்திர அனுபவம் எதிர் மாறாய்

வீசும் கடலையும் காற்றையும் அதட்ட அமர செய்ய முடியாமல் அழிவின் நேரத்தில் ஆண்டவரே, போதகரே, நாங்கள் மடிந்து போகிறோம் என்று கூறி இயேசுவை எழுப்பினார்கள். மாற் 4:35-41 எல்லாவற்றையும் ஆண்டருளும் அகில அரசன் எழுந்தார். குமுறும் காற்றையும் கொந்தளிக்கும் கடலையும் நோக்கி கடலே, இரையாதே; காற்றே அமைதலாயிரு என்றார் அவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும் என்ற வல்லவர் வார்த்தைப்படி, சர்வ சிருஷ்டியும் அவர் சொல்லுக்கு செவி கொடுத்து கேட்டு கீழ்ப்படிகின்றன. ஆனால் அறிவீன மனிதன் மனந் திரும்பாமலிருப்பது எத்தனை வேதனையானது. ஒரு இனியபாடல், ''இயேசுவும் நானும் ஒன்றாயிருக்கும்போது வீசும் புயலைப்பற்றி கவலை ஏது? இக்கரை மீட்டு அக்கரை அழைத்தவர், அக்கரையாய் நம்மை நடத்த வல்லோர், மடிந்து போகிறோம் என்றலராதே மரண பரியந்தம் நடத்த வல்லோர். இயேசுவும் நாமும் ஒன்றாயிருக்கும் போது நம் வாழ்க்கைப் படகிற்கு ஒன்றும் நேரிடாது.'' ஏனோக்கு மோசே, இஸ்ரவேலர், யோசுவா, தாவீது சீஷர்கள் வாழ்வில் கர்த்தரை முன்பாக வைத்து வணங்கி விசுவாசித்து வையகமாய் சமுத்திரமதில் வெற்றியாய் ஓடி முடித்தது போல் உங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் கர்த்தரை உங்கள் முன்பாக வைத்து ஜீவிப்பீர்களாக.

7. ஏனோக்கு தேவனிடம் மனத்தாழ்மையாய் வாழ்ந்தான்.

அவர்கள் எனக்கு எதிர்த்து நடந்தபடியினால் நானும் அவர்களுக்கு எதிர்த்து நடந்து அவர்களுடைய சத்துருக்களின் தேசத்திலே அவர்களை கொண்டு போய் விட்டதையும் அறிக்கையிட்டு, விருத்தசேதனமில்லாத தங்கள் இருதயத்தை தாழ்த்தி தங்கள் அக்கிரமத்துக்குக் கிடைத்த தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொண்டால் முற்பிதாக்களோடே பண்ணின உடன்படிக்கையையும் தேசத்தையும் நினைப்பேன். லேவி 26:41, 42. துணை செய்யும் தேவனிடம் தேவஜனம் எதிர்த்து நடந்ததை நாம்

படித்தோம். சீஷன் குருவிடம், குரு எஜமான்களிடம், எஜமான்கள் மேலானவர்களிடம், பிள்ளைகள் பெற்றோரிடம், மனைவி கணவரிடம், மருமகள் மாமியாளிடம் எதிர்க்கின்றனர். அதே போல் கட்சிக்கு கட்சியும், ஊருக்கு ஊர், தேசத்திற்கு தேசம், நாட்டுக்கு நாடு, வீட்டுக்கு வீடு, மதத்திற்கு மதம் எதிர்ப்பு இந்த எதிர்ப்பைப் பார்க்கிலும் சர்வசிருஷ்டிகளிடம் பணிவிடையாளனான லூசிபர் என்ற விழுந்து போன, தள்ளப்பட்ட தூதன் எதிர்த்தான். அதன் பலன் அழிவு, நியாயத்தண்டனை முடிவு நேரிட்டன. இஸ்ரவேல் மக்களின் வாழ்க்கை குண நலம் தேவனிடம் எதிர்த்து தேவ தண்டனையை தேவ கோபத்தை வாழ்வில் வருவிக்கலாயினர். அவர்களுக்கு தேவ அன்பு, தேவ இரக்கம், மீண்டும் மன்னிக்கிற மனதுருகுகிற மன இரக்கமுள்ளவர் சொன்னார்; விருத்தசேதனமில்லாத தங்கள் இருதயத்தைத் தாழ்த்தி தங்கள் அக்கிரமங்களை அறிக்கையிட்டு தங்கள் வாழ்வில் நேரிட்ட காரியங்களை நியாயம் என்று உணருகிற சமயம் தேவன் நினைப்பார். நான் இன்று உனக்கு கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக் கொள்ள வேண்டும் என்பதையே அல்லாமல் வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் உபா 10:13 கர்த்தருடைய ஜனத்தினிடத்தில் கர்த்தர் விரும்புவது மனத்தாழ்மை, அடக்கம், ஒழுங்கு கீழ்ப்படிதலை விரும்புகிறார். இதற்கு மாறாய் நடந்தனர் சில இராஜாக்கள். ஆமோன் தன் தகப்பனாகிய மனாசே தன்னைத் தாழ்த்திக் கொண்டது போல இந்த ஆமோன் என்பவன் கர்த்தருக்கு முன்பாக தன்னை தாழ்த்தாமல் மேன்மேலும் அக்கிரமம் செய்து வந்தான். II நாளா 33:23 இராஜாவே மேன்மேலும் தவறு அக்கிரமம் செய்யும் போது அவனது மனைவி பிள்ளைகள், உடன் உள்ள மந்திரிகள், கீழ் அதிகாரிகளும் தவறு செய்ய வழி ஏதுவாகிறது. அதிபதியானவன் பொய்களுக்குச் செவி கொடுத்தால் அவன் ஊழியக்காரர் யாவரும் துன்மார்க்கராவார்கள். நீதி 29:12 ஆமோன் போன்ற அதிபதிகளான இராஜாக்களே, தலைவர்களே, நீங்கள் தனிப்பட்ட வாழ்வில் தேவனுக்கே துரோகம்

செய்து துன்மார்க்கமாய் பொய்யில் ஈடுபட்டால் உன் குடும்
பம் உன் உடன் ஊழியர்கள் உன்னைக் காட்டிலும் கேடா
வார்கள். தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்குப் பொல்
லாப்பானதைச் செய்தான். அவன் கர்த்தருடைய வாக்கை
உரைத்த எரேமியா என்கிற தீர்க்கதரிசிக்கு முன்பாகத்
தன்னை தாழ்த்தவில்லை. II நாளா 37:12 சீரழியும் சிதேக்
கியா தீர்க்கத்தரிசி சொல்லும் புத்திமதிகளை தேவ ஆலோ
சனையை அங்கீகரியாமல் எதிர்த்ததால் சிதேக்கியாவின்
அரசாட்சி சீர் பொருந்தாமல் கவிழ்ந்தது போல், உங்கள்
வாழ்வில் புத்தி புகட்டும் போதகர்களை ஊழியர்கள்
யோசனையை அல்லல்தட்டி அலட்சியமாய் எண்ணுவீர்
களானால் உருவழியும் போது நீ துக்கித்து ஐயோ! போத
கத்தை வெறுத்தேனே. கடிந்து கொள்ளுதலை என் மனம்
அலட்சியம் பண்ணினதே. என் போதகரின் சொல்லை நான்
கேளாமலும் எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்கு என்
செவியை சாயாமலும் போனேனே. சபைக்குள்ளும் சங்கத்
துக்குள்ளும் கொஞ்சங் குறைய எல்லாத் தீமைக்கும் உள்
ளானேனே என்று முறையிடுவாய் நீதி 5:12-14. சிதேக்
கியாவின் முறையீடான இந்த அழிவிலிருந்து ஆகாப் திருந்
தினான். ஆகாப் இந்த வார்த்தைகளைக் கேட்ட போது தன்
வஸ்திரங்களைக் கிழித்து தன் சரீரத்தின் மேல் இரட்டைப்
போர்த்துக் கொண்டு உபவாசம் பண்ணி இரட்டிலே படுத்
துத் தாழ்மையாய் நடந்து கொண்டான் I இராஜாக்கள்21:27

நாபோத்தின் நியாயமான நிலத்தை நாடி நேசித்து
தன் துணைவியாகிய யேசபேல் சொல் கேட்டு இரத்தப் பழி
யான சாபத்தை ஏற்றான் ஆகாப்பின் துணைவி யேசபேல்
என்றால் பேய் என்ற பெயருக் கொப்பாக வாழ்ந்ததால்
முடிவில் வேதனை வந்தன. தேவ எச்சரிப்பைக் கேட்ட ஆகாப்
தேவ சமூகத்தில் தன்னை தாழ்த்தினான். தேவனின் தய
வாகிய மன்னிப்பை பெற்றான். அநியாய அழிவில் முன்னே
றும் ஊழியரே விசுவாசியே ஆகாப்பைப் போல் தாழ்மை
யாகு. அப்பொழுது உனக்கு வரும் நினையாத மரணம் உன்
சந்ததியை பின்பற்றும் சாபம் நீங்கும். நான் இந்த ஸ்த

லத்திற்கும் அதின் குடிகளுக்கும் விரோதமாக அவர்கள்
பாழும் சாபமுமாவார்கள் என்று சொன்னதை நீ கேட்ட
போது உன் இருதயம் இளகி நீ கர்த்தருக்கு முன்பாக
உன்னைத் தரழ்த்தி உன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு
எனக்கு முன்பாக அழுதபடியினால் நானும் உன் விண்ணப்
பத்தைக் கேட்டேன். II இராஜா 22:19, II நாளா 34:23
தன் வாழ்வின் துன்பத்தையும் எண்ணாமல் தன் ஜனத்தின்
மேல் வரும் பாழும் சாபமுமானதை யோசியா யோசித்து
இருதயம் இளகி தேவனிடம் அழுததால் தேவன் அவன்
விண்ணப்பத்தைக் கேட்டார். இப்பேர்ப்பட்ட இராஜாக்கள்
அதிபதிகள் ஊழியர்கள் மனிதர்கள் என்று இருந்தால் எப்
படியும் உலகிற்கு அழிவு வராதே. நாம் நினைவில் வைப்
போம் இருதயம் இளகி இகமதில் அழியும் மக்களுக்காக
இரவு பகலாய் முறையிடுவோம். இரக்கத்தில் ஐஸ்வரிய
முள்ளவர். கண்டிப்பாய் இரங்குவார். மனுஷனே நன்மை
இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயஞ்
செய்து இரக்கத்தை சிநேகித்து உன் தேவனுக்கு முன்பாக
மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்
தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். மீகா 6:8 அருமை
யான தேவ ஜனமே ஆண்டவர் உலகிலுள்ள மக்களிலும்
நம்மிடம் நாம் உயர மனத்தாழ்மையை கேட்கிறார் விரும்பு
கிறார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரண பரியந்
தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்த
வராகி தம்மைத் தாமே தாழ்த்தினார். பிலி 2:8 நமது ஆத்து
இரட்சகரும், மீட்பரும், மேய்ப்பரும், எஜமானனுமான அன்பு
சகோதரர் அருமை ஆண்டவரின் தாழ்மை, கீழ்ப்படிதல், சகிப்பு
தன்மை நம்மில் உண்டா? கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்
படுங்கள். அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார் யாக்
4:10. யாக்கோபு பக்தரின் தேவ ஆலோசனைப்படி தேவனி
டம் கர்த்தர் முன்பாக தாழ்மைப்படுவோம். ஏனோக்கு தேவ
னிடம் தாழ்மையாய் நடந்ததால் எடுத்துக் கொள்
ளப்பட்டான். எதிர்த்து நிற்கிற திமிர்வாதமுள்ள இராஜாக்
களைப் போல் அல்லாமல் தேவ சமூகத்தில் இருதயம் இளகி
அழுத யோசியாவைப் போல் ஆகாபைப் போல கர்த்தர்
முன் தாழ்வோமாக.

8. சத்திய வேதம் அவன் வாயில் இருந்தது மல் 2:6

ஏனோக்கு தன் தேவனாகிய கர்த்தருடைய போதனையை பொன் வார்த்தைகளாகிய சத்தியமதை அறிந்திருந்தான். ஆசாரியன் லேவியன் போல் கர்த்தரின் வார்த்தையாகிய சத்தியவேதம் இருதயத்தில் வாயில் இருந்தன. (1) சத்திய வேதம் அவன் வாயிலிருந்தது, (2) அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை, (3) அவன் என்னோடே சமாதானமும் யதார்த்தமுமாய் சஞ்சரித்து (4) அனேகரை அக்கிரமத்தினின்று திருப்பினான். (5) ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்க வேண்டும். (6) வேதத்தை அவனுடைய வாயிலே தேடுவார்களே. மல் 2:6.

அன்றைய நாளில் கர்த்தர் தமது ஜனமாம் இஸ்ரவேலரிலே ஆசாரிய ஊழியம் கர்த்தருக்குபணிவிடைஊழியம்செய்ய தெரிந்தார். பிரித்தெடுத்தார். அவ்வாசாரியனாகிய லேவியன் தேவ வார்த்தையைக் கற்று மற்றவர்க்கு போதிக்க வேண்டும் என மல்கியா தீர்க்கத்தரிசி ஆசாரியன் லேவியன் குணநலம் பற்றி தெளிவாய் கூறியதை அதிவிரைவில் படித்து விடுகிறோம். ஆனால் தனிப்பட்ட வாழ்வில் எங்ஙனம் உள்ளோம். லேவி என்றால் சேர்த்தல் என பொருள் படும். ஆங்கில வேதாகமத்தில் இணைத்தல் என உள்ளன. ஒரு மனிதன் தேவனற்றவனாய், தேவனை மறப்பவனாய், தேவனை விட்டு பின் வாங்கி தூரமாய் போகிறவனாய், காணப்படும் போது தேவ வார்த்தைகளை கூறி தேவனிடம் தேவனோடு இணைப்பது சேர்ப்பது லேவியன் ஆசாரியன் பணியாகும். ஆனால் இன்றைக்கு ஆசாரியன் லேவியன் என்று சொல்லும் ஸ்தானாதிபதிகள். கண்காணிகள், தலைவர்கள், அப்போஸ்தலர்கள், மூப்பர்போதகர்கள், சுவிசேஷகர் ஊழியங்களை பிரசங்கங்களை நடக்கைகளை கவனித்தால் கேவலமாய் உள்ளன. பட்டங்கள் பல பெற்றும் பதவியில் உயர்ந்தும் பரிசுத்த சத்திய வேதத்தின் வேத வசனம் மனப்பாடமாய் தெரியாத கோடி கோடி

உதவாத ஊழியர்கள் உள்ளனர், பழமொழி முதியோர் கூறுவர். சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும் என்பர். மெய்தான் சட்டியாகிய இருதயத்தில் வேத வசனம் இருந்தால் அகப்பையாகிய (கரண்டியாகிய) நாவில் வரும் கிறிஸ்துவின் சபை உக்கிராணக்காரரே உங்கள் குடும்பமாகிய மந்தையை கர்த்தரின் வேதத்திற்கேற்றவாறு கண்காணிக்காவிட்டால் உங்களை கர்த்தர் எசேக்கியேல் 34ம் அதிகாரப்படி தண்டிப்பார். மற்ற மார்க்கத்தை மதத்தைப் பார்த்தால் கடினமான கட்டுப்பாடு கஷ்டமான கொள்கையற்றதாய் கேட்பாரற்றதாய் கட்டுப்பாடு கண்டிப்பு அற்றதாய் காணப்படுவதை அறிந்து தேவாதி தேவன் பயங்கர வேதனை அடைகிறார் தேவ ஜனமே. நீங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டதுண்டானால் மல்கியா தீர்க்கதரிசி கூறிய வார்த்தைப்படி சத்திய வேதம் உங்கள் வாயில் இருக்க வேண்டும். சத்திய வேதம் இருக்கிற உதட்டில் அநியாயம் காணப்பட கூடாது. சத்தியபரனும் தேவனோடே சமாதானமும் யதார்த்தமுமாயிருக்க தேவனோடு தேவ சந்ததியில் தேவ சமூகத்தில் சஞ்சரிக்க வேண்டும். சத்தியத்தால், சத்திய போதனையால் அனேக அக்கிரமகாரரை ஆண்டவரிடம் திருப்ப வேண்டும். சத்தியத்தைக் கூறுகிற ஆசாரியனுடைய ஊழியனுடை விசுவாசியினுடைய உதடுகள் அறிவைக் காக்க வேண்டும். வேதத்தை உங்கள் நடக்கையிலே, குடும்பத்திலே, பேச்சிலே தேடுவார்களே. சத்தியத்தை அறிந்த மனிதன் வார்த்தையாலும் சர்வ வல்லவரைத் துதிக்க வேண்டும். சோதனை, பாடு, பிரச்சனையின் போது குறி கேட்டல், மற்ற நாமங்களை நாடுதல் கர்த்தருக்கு கோபமாகும். தாவீது யூத கோத்திரத்தில் பிறந்தான். யூதா என்றால் துதி என்று பொருள்படும். தன்கோத்திர கொள்கையைக் கடைபிடித்து நடந்து உண்மை மனதோடு கூறுகிறான். கர்ததரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன் அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும் சங் 34:1 என்ன அருமையான அனுபவம் அந்நாளில் தாவீதின் அனுபவம் அவ்வண்ணமிருந்தன. இந்நாளில் உள்ள ஊழியர்கள்

விசுவாசிகள் கிறிஸ்துவர்கள் அனுபவம் எவ்வண்ணம் உள்ளன. சத்தியத்தை போதிக்கிற ஊழியர்கள் உதட்டில் இருதயத்தில் பொறாமை, பெருமை, அகங்காரம் வம்பு பகை, பிடிவாதம், மூர்க்கம், புறங்கூறுதல், கோள் சொல்லுதல் தூற்றி திரிதல், தேவனோடு தேவனுக்குள் உள்ளவர்களை பிரிப்பது தான் இன்றைய உயர்ந்த சிறந்த ஊழியம். ஊழியராகிய ஆசாரியன் லேவியன் ஊழியம் போல் விசுவாசி நீதிமான்கள் பரிசுத்தவான்களின் வாழ்வில் வேதத்தை வாசிப்பதை விட்டு அறிவீன மக்களாம் அவபக்தியுள்ள அழியும் மானிடர்கள் போல் காதல் கதை கட்டுக்கதை நாவல், செக்ஸ், சினிமா கதை மற்றும் நடனம் களியாட்டு சினிமா பார்க்கின்றனர். தேவனை துதிக்கும் ஆண்கள் நாவில், உதட்டில், வாயில் உலக வஸ்துக்கள் பீடி, சிகரெட், சுருட்டு, கஞ்சா, சாராயம் மற்றும் பல விதமான போதைகளை உபயோக்கின்றனர். பெண்கள் உதட்டில் லிப்ஸ்டிக், கண்மை, மற்றும் ஆண்களைப் போல் கிராப் வெட்டி உள்ளனர். சத்திய வார்த்தையை கூறினால் வெள்ளையர்கள் எப்படி உள்ளனர் என்கிறார். உடல் அழகுள்ள மனிதர்கள் பரலோகம் செல்ல முடியாது மனந்திரும்பிய மனிதர்களே மகிமையின் ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும். என் ஆண்டவர் சொல்கிறார். வேதத்தை குறித்து இடற பண்ணினீர்கள் மல் 2:8எஸ்றா பக்தன் கூறுகிறார். உம்முடைய நீதி நித்திய நீதி உம்முடைய வேதம் சத்தியம் சங் 119:142. ஆகாமியம் என் உதடுகளுக்கு அருவருப்பானது. நீதி 8:7 சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும். நீதி 12:19 கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும். நீதி 16:6 நீதியை தேடா நாசர்களாகிய இஸ்ரவேலர்களைக் குறித்து ஏசாயா மூலம் கர்த்தர் கூறுகிறார். நீதியைத் தேடுகிறவனுமில்லை. சத்தியத்தின்படி வழக்காடுகிறவனுமில்லை. மாயை நம்பி அபத்தமானதை பேசுகிறார்கள். தீமையை கர்ப்பந்தரித்து அக்கிரமத்தை பெறுகிறார்கள். நியாயம் பின்னிட்டு அகன்றது. நீதி தூரமாய் நின்றது. சத்தியம் வீதியிலே இடறி யாதர்த்தம் வந்து சேரமாட்டமற் போகிறது. சத்தியம் தள்ளுபடியாயிற்று. பொல்லாப்பை விட்டு விலகு

கிறவன் கொள்ளையாகிறான். இதை கர்த்தர் பார்த்து நியாயமில்லையென்று விசனமுள்ளவரானார். ஏசா 59;4, 14,15 இன்றைக்கிருக்கும் அத்தனை கிறிஸ்தவ விசுவாசிகள் குடும்பங்களில் ஸ்தாபனங்களில் மெய்யாய் இவை நடை பெறுகின்றன. நியாயஞ் செய்கிற மனுஷனை கண்டு பிடிப்பீர்களோ என்றும் சத்தியத்தைத் தேடுகிறவன் உண்டோ என்றும் எருசலேமின் தெருக்களிலே திரிந்து பார்த்து விசாரித்து அதின் வீதிகளிலே தேடுங்கள் காண்பீர்களானால் அதற்கு மன்னிப்புத் தருவேன். கர்த்தாவே உம்முடைய கண்கள் சத்தியத்தையல்லவா நோக்குகின்றது. அவர்களை அடிக்கிறீர் ஆனாலும் அவர்களுக்கு நோகாது அவர்களை நிர்மூலமாக்குகிறீர் ஆனாலும் புத்தியை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்கிறார்கள். தங்கள் முகங்களைக் கன்மலையைப் பார்க்கிலும் கெட்டியாக்கி திரும்ப மாட்டோம் என்கிறார்கள். ஏரே 581, 3. உங்கள் குடும்பத்தில் ஊழியத்தில் ஏற்பட்ட இழப்பு, தோல்வி, ஏமாற்றம், நிந்தை, அவமானம், துக்கம் பாடுகளை எண்ணி தேவனிடம் திரும்புங்கள். சத்தியமாவது என்னென்று தெரியாத பிலாத்துவைப் போன்ற பித்தர்கள் உலகில் உண்டு சத்தியத்தை சத்தியமாய் கூறுங்கள் யோவான் 18:38. நம்மிடத்தில் அன்பு கூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக்கழுவி தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும் ஆசிரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. இரவு பகலாய் இனிய வேதமாம் சத்தியத்தை இருதயமாம் பலகையில் பதித்து சத்தியத்தை சத்தியமாய் கூறி சத்திய பரன் இயேசுவுக்கு சாட்சியாய் வாழ்வீர்களாக.

9.கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்

ஏனோக்கின் உன்னத உயர்ந்த நோக்கம், திட்டம் யாவர்க்கும் தேவ எச்சரிப்பையும், தேவ வருகையில் நியாயத் தீர்ப்பையும். தனது தனிப்பட்ட வாழ்வில் தேவனின் வருகையை தெள்ளத் தெளிவான தரிசன வெளிப்பாடுடன்

கூறினான். சங்கீதக்காரனாகிய தாவீது தன் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியைத் தன் தேசத்திற்குக் கொண்டு வந்ததும் மனமகிழ்ச்சி ஆரவாரத்தோடு கூறினான். அப்பொழுது கர்த்தருக்கு முன்பாக காட்டு விருட்சங்களும், கெம்பீரிக்கும். அவர் பூமியை நியாயந் தீர்க்க வருகிறார். I நாளா 16:33 அவர் (கர்த்தர்) வருகிறார். அவர் பூமியை நியாயந் தீர்க்க வருகிறார். அவர் பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நிதானத்தோடும் நியாயந் தீர்ப்பார் சங் 96:13,98:9. பூமியை பூமியின் குடிகளான சகல ஜனங்களை நீதியோடும், சத்தியத்தோடும் நிதானமாய் நியாயம் தீர்ப்பார் என தீர்க்க தரிசனமாய் கூறினார். கர்த்தர் வருகிறார். அவருடைய கோபத்தின் ஆயுதங்களும் தேசத்தையெல்லாம் அழிக்க வானங் கவிழ்ந்த கடையாந்தர தேசத்திலிருந்து வருகிறது. ஏசா 13:50. ஏசாயா தீர்க்கதரிசி யெகோவாவின் வருகையை ஏளனம், பரியாசம் செய்த யாவர்க்கும் தேவனை விட்டு விட்ட தமது இஸ்ரவேலர்க்கு தீர்க்க தரிசனமாய் கூறினான். ஒருவன் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூறாமற் போனால் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன். கர்த்தர் வருகிறார் I கொரி 16:22. பதினாலு நிருபங்கள் எழுதிய பரிசுத்த பவுல் பரம தரிசனத்தைக் கண்டு கர்த்தர் இயேசுவால் இரட்சிக்கப்பட்டவன் கலா 1:12, பக்தி வைராக்கியத்துடன் கூறுகிறான். ஒருவன் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூறாமல், நம்பிக்கை, விசுவாசம் கொள்ளாமல் ஏற்றுக் கொள்ளாமல், வணங்காமல் உள்ள புறஜாதியானானாலும் பேர் கிறிஸ்தவனானாலும் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன் என்று கூறி நியாயந் தீர்க்க தண்டனை வழங்க இயேசு வருகிறார் என்று தீர்க்க தரிசனமாய் கூறினான். ஆதாமுக்கு ஏழாந் தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக் குறித்து இதோ எல்லாருக்கும் நியாயத் தீர்ப்பு கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய் செய்து வந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தம் தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும் அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்

கூட கர்த்தர் வருகிறார் என்று முன் அறிவித்தான். யூதா 1:14,15. இயேசுவை அறியாத ஏற்றுக் கொள்ளாத தர்க்கித்த, விவாதித்த, புறக்கணித்த, அவமதித்த பரியாசம் செய்த, தூஷித்த, நிந்திந்த, அவபக்தியுள்ளவர்களான விக்கிரக ஆராதனை, சிலை வணக்கத்தாரை, நாத்திகரை, புறஜாதியாரை பரிசுத்தமில்லாதோரை என்றென்றுமாய் ஜீவிக்கிற என் தேவனாதிய யெகோவா என்னும் இரக்கமுள்ள இயேசு ராஜா ஆயிரமாயிரமான எண்ணுக்கடங்கா பரிசுத்தவான்களோடே வருகிறார் என்று ஆணித்தரமாய் அதிகாரத்தோடும், ஆத்தும துக்கத்தோடும் கர்த்தர் வருகையை அறிவித்திருப்பார். தன் வாழ்வில் பூரண நம்பிக்கையுடன் தரிசனத்தில் தேவ வருகையை நன்கு அறிந்தவன். என் அருமை கிறிஸ்துவின் ஊழியரே, விசுவாசியே! உங்கள் இரா சொப்பனங்களில் உபவாச ஜெபத்தில், தரிசனத்தில் இப்பேர்ப்பட்ட வெளிப்பாடு உண்டா. ஏனோக்கு, தாவீது, ஏசாயா, சகரியா பவுல் இவர்கள் கூறியபடி சீக்கிரம் இயேசு வருகிறார். என் அனுபவத்தில் திட்டமாய் கூற முடியும். பல நாட்கள் ஆத்தும பாரம் ஆத்தும துக்கத்துடன் உபவாசத்தில் ஜெபிக்கும் போது என் அருமை இயேசு ராஜா அனேக தரிசன காட்சியுடன் மகனே சீக்கிரமாய் வருகிறேன் என கூறி அகோர ஆபத்திலும் அபாயத்திலும் உன்னுடனே இருக்கிறேன் என்றார். இயேசுவின் வருகையை குறித்து பல பாடல்கள் எழுதி உள்ளேன். சகரியா 14:5ல் என் தேவன் வருவார் என கூறினார். ஏனோக்கும் மற்ற தாசர்களும் கர்த்தர் வருகிறார் என்றார்கள். யோவான் வெளிப்படுத்தலில் ஆமென் இதோ மேகங்களுடனே வருகிறார் வெளி 1:8 இயேசுவே வாசற்படியிலே வந்து தட்டுகிறார் வெளி 3:20 என்றான். சகோதரரே நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார் என யாக்கோபு 5:9, வாசற்படியிலே நிற்கிறவர் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். வெளி 22:11,12. தேவ வருகை உங்களுக்கு சந்தோஷமா! சலிப்பா! அவர் வருகையை எதிர்பார்க்கும் மாந்தர்க்கு அவர் வருகை மிக்க மகிழ்ச்சி. அவர் வருகையை எதிர்பாரா மாந்தர்க்கு அவர் வருகை மிகப்பெரும் அதிர்ச்சி. 1978-ல் டெல்லி வந்ததும் பண

நோட்டிலும் பல கடிதங்களிலும் இயேசு சீக்கிரம் வருகிறார். Jesus comes soon என எழுதினேன். அனேக பஸ்நடத்துனர்கள், பல வாலிபக் கல்லூரி மாணவ மாணவிகள் Who is Jesus என என் கடிதம் பெற்றவர்களிடம் கேட்டுள்ளனர். ஏனோக்கு தன்னால் இயன்ற முறையில் தேவ பெலம் கொண்டு தேவ வருகையை அறிவித்தான். அதனால்தான் கர்த்தர் ஏற்றுக் கொண்டார் எடுத்துக் கொள்ளப்பட்டார். தேவ வார்த்தையும், தீர்க்க தரிசனமும் நிறைவேறும் இந்நாட்களில் முடிவு சமீபம் நாம் ஏனோக்கைப் போல் யெகோவாவின் வருகையை எடுத்துரைப்போம். அக்கிரமம் மிகுதியாவதினாலே அனேகருடைய அன்பு தணிந்துபோம். மத் 24:14. எல்லா மனுஷருடைய இருதயமும் சோர்ந்து போகும். அப்போது வருவார்—லூக் 21:26 வருகிறவரின் பொன் முகம் காண வாஞ்சிப்பீர்களாக.

10. விசுவாசத்தினாலே ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்

மண்ணுலகில் மாமிசமாய் மனு அவதாரம் எடுத்தவர்களில் மரணத்தைக் காணாமல் மாமிச அழிவின்றி மோட்சமாகிய பரலோகம் சென்றவர்கள் இரண்டு பேர். 1. முதல்வர் ஏனோக்கு, 2. இரண்டாவது எலியா, மூன்றாவதாக யார் எனில் இக்கடைசி காலத்தில் கர்த்தரின் வருகைக்காய் ஆயத்தமாகும் மணவாட்டியாகிய கிறிஸ்துவின் சபையாராகும். ஏனோக்கைக் குறித்தும் அவர் எடுத்துக் கொள்ளப்பட்டதை குறித்தும் ஆராய்வோமானால் அனேகமுண்டு. சுருக்கமாய் எபிரெய எழுத்தாளர் கூறியதை பாருங்கள். விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான். தேவன் அவனை எடுத்துக் கொண்ட படியினாலே அவன் காணபடாமற்ப் போனான். அவன் தேவனுக்கு பிரியமானவனென்று எடுத்துக் கொள்ளப் படுவதற்கு முன்னமே சாட்சி பெற்றான். எபி. 11:5 என் அருமை கிறிஸ்தவர்களே உங்கள் வாழ்க்கை

யில் இப்படிப்பட்ட சாட்சியின் ஜீவிதம் உண்டா. ஏனோக்கை ஏற்றுக் கொண்டவர் எடுத்துக் கொண்டவர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பின் சந்ததியையும் தேவன் எடுத்துக் கொள்வாரா? எப்படியாய் உங்கள் ஆவிக்குரிய வாழ்வை நடத்துகிறீர்கள்? ஏனோக்கு மரணத்தைக் காணாதபடி மகிமையாகிய நித்திய ராஜ்யத்தில் மகத்துவ தேவனிடம் வாசம் பண்ணும் பேரின்ப பாக்கியத்தைப் பெற்றானல்லவா? இவ்வுலகில் தேவ நாமத்திற்காய் பக்தி வைராக்கியம் கொண்ட எலியாதீர்க்கதரிசி தேவ ஜனமாகிய இஸ்ரவேலரை தேவனண்டை இழுத்துக் கொள்ள இரவு பகலாய் வனாந்தரமதில் உபவாசத்திலும் ஜெபத்திலும் மன்றாடி தேவ சந்ததியாகிய இஸ்ரவேலர்க்கு தேவ அற்புதத்தை காண்பித்த இராஜாக்கள் இருமனமாய் குந்தி குந்தி நடந்த இஸ்ரவேலர்க்கு முன் யெகோவாவேஜீவனுள்ளதேவன் என்பதை நிரூபித்து காட்டிய தேவ மனிதனை தேவன் எப்படி எடுத்துக் கொண்டார் பாருங்கள். அவர்கள் பேசிக் கொண்டு நடந்து போகையில் இதோ அக்கினி ரதமும் அக்கினி குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது. எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப் போனான். II இராஜா 2:11. ஆமென் தேவாதி தேவனுக்காய் தேவ சித்தத்திற்காய் வாழ்ந்த எலியாவிற்கு அக்கினி ரதமும் அக்கினி குதிரைகளும் ஆண்டவர் சமூகத்திலிருந்து வந்தனவே என் அருமை தேவ ஜனமே உங்களை நன்கு ஆராய்ந்து பாருங்கள். இந் நேரமதிலே இயேசு வருவாரானால் அவருடனே அவரோடு வாழ நீங்கள் ஆயத்தமா. எண்ணுங்கடங்கா தூதரோடு ஜெய கெம்பீரத்தோடு வரும் நம் நீதியின் நியாயாதிபதி இயேசுவை சந்திக்க ஆயத்தமா. எலியாவிற்கும் ஏனோக்கிற்கு மட்டுமல்ல இம் மேன்மை கிறிஸ்துவுக்குள் வாழும் யாவர்க்கும் என சத்தியம் கூறுகிறது. இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் போது ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப் பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப் படுவோம். எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூப

மாக்கப் படுவோம். I கொரி 15:51, 52 தேவ வருகைக்காய் ஆவலாய் வாஞ்சை ஆயத்தமாய் காத்திருக்கும் மணவாட்டியாகிய கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு பவுல் கூறும் ஆலோசனை ஒரு நிமிஷத்திலே இமைப் பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். நமக்கு முன்னதாக தேவ சமூகமாகிய பரதீஸிலே இளைப்பாறும் நம் முன்னோர்களும் கிறிஸ்துவுடனே எழுந்து வருவார்களாம். பின்பு உலகில் உயிரோடிருக்கும் நாமும் மறுரூபமாக்கப் படுவோமாம். மேலும் தெசலோனிக்கேய சபைக்கு எழுதும் போது பவுல் கூறும் மற்றொரு ஆலோசனையை பாருங்கள். ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். IIதெச 4:16,17. கர்த்தர் அதிகாரமுள்ள ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருகிறவரோடு கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாய் வாழ்ந்து மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கிறிஸ்துவுக்குள்ளான ஜீவிதம் உயிருள்ள கிறிஸ்தவனாய் இருப்போமானால் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவோம். உடல் ஆத்மா சரீரமதில் செத்தவர்களாய் பரிசுத்தம் ஜெப ஜீவிதம் சபை ஐக்கியமின்றி செத்த வாழ்வாயிருக்குமானால் ஏதோ முன்னோர் ஜெபத்தால் தானதர்மத்தால் பக்தியால் நமக்கும் பரலோகில் இடமிருக்கும் என்று எண்ணி நாம் பூலோகில் மிருகம் போல் வாழ்வோமானால் கர்த்தர் எடுத்துக் கொள்ள மாட்டார். ஏனோக்கு தன் பேருக்கேற்ற பிரதிஷ்டை வாழ்வாகிய தேவனோடு சஞ்சரித்து தேவனிடம் மனிதர்களிடம் ஐக்கியமாயிருந்து நீதிமானாய் உத்தமனாய் வாழ்ந்து, பாவமதில் வாழ்வோரை எச்சரித்து,எப்பொழுதும் கர்த்தரை தன் வாழ்வில் முன்பாக வைத்து, மனத் தாழ்மையாய் நடந்து

சத்திய வேதத்தை தன் இருதயம் நாவில் காத்து கர்த்தர் வருகிறார் என்ற அதிசய தொனியை முழக்கினான். அதனால் மகிமையான தேனிடம் எடுத்துக் கொள்ளப்பட்டான். ஏனோக்கு எலியாவை எடுத்துக் கொண்டவர் உங்களையும் எடுத்துக் கொள்ள ஜெபியுங்கள். தேவாதி தேவன் தினமும் தூய வழியில் நம்மை நடத்தி துணை புரிந்து தேவ வருகைக்காக ஆயத்தப் படுத்துவாராக. ஆமென்... ஆமென்... ஆமென்.

ஆசிரியரின் சாட்சி:-

தேடுவோர்க்கு தென்படும் தேவன் இயேசு. ஏசா 65:1

கர்த்தருக்குள் அன்பானவர்களே, நான் ஒரு இந்து. வைராக்கிய மார்க்கத்தில் வாழ்ந்தவன். என் சொந்த ஊர் பழனி அருகில் கொத்தயம். என் இளமைப்பருவம் வேதனையும் வருத்தமும் நிறைந்தது. என் சிறு வயதில் ஒரு ஜன்னி வலிப்பு ஏற்பட்டதால் வாலிபம் தொடரத் தொடர கை, கால் நரம்புகள் அவ்வலிப்பின் தாக்குதலால் வேதனை ஏற்படும். அதோடு மரண பயமும் மாய இருளில் கட்டியிருந்தன. இவ்விரு கொடூரக் கட்டிலிருந்து விடுதலை பெற உலகில் எத்தனையோ தெய்வங்களை வணங்கினேன். பின் வாலிப வயதில் வல்ல தேவனைக் குறித்து சிந்திக்க செயல்பட்டு காந்திய வழியில் பகவத்கீதையைப் படித்து ஐந்து வருடம் அகிம்சை வழியில் புலால் புசியாமல் பரிசுத்தமானவரும் நித்தியமானவருமான சத்திய தேவனை என் ஆத்துமா தேடித் தேடி ஏங்கி அலைந்தும் காண முடியவில்லை. எங்கு சென்றாலும் என் மனதில் ஒரு வெறுமை.உலகில் என் உயிர் அந்தரங்கமாய் தொங்குவதுபோல் எனக்குள்ளே இக்கேள்வி, மரித்தால் நீ எங்கே போவாய் என்றும், உன்னை உருவாக்கின தேவன் யார் என்றும் தெரியுமா என்றது. இதற்கு முடிவு காண வேறு ஒன்

றும் தெரியாமல் ஒரு இந்து ஆலையம் சென்று வானம், பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரம், மனுமக்களைப் படைத்த ஒரு தேவன் உலகில் உண்டென்றால் என்னுடன் பேசும். இல்லையெனில் என் வியாதியையும் மரண பயத்தையும் நீக்கும் என்றும், மூன்று நாட்களுக்குள் முடிவு காணப்பட வேண்டும் என தீர்மானம் எடுத்து மூன்று நாட்களும் புசியாமல் தனியே துக்கத்துடன் துயரக் கண்ணீரில் ஏங்கிய ஏக்கத்துடன் இரவு பகலாய் எதிர்பார்த்து அகிம்சை தியானமாய் அமர்ந்திருந்தேன். 20-5-1974ல் காலை 7-00 மணி அளவில் ஒரு மெல்லிய சத்தம் கேட்டேன். மகனே, இன்று நீ என்னை விசுவாசி. அப்பொழுது உன் வியாதியும் மரண பயமும் நீங்கும் என்றன. இச்சத்தம் மனித தொனியோ என சந்தேகப்பட்டு யோசித்தேன். இரண்டாவது சத்தம், நீ நினைக்கிற நாமங்கள் நானல்ல. உன் பாடல் நோட்டை எடுத்துப்பார் அதில் என் பெயருண்டு என்றது. அந்நிமிடமே என் பாடல் நோட்டைப் பார்த்து- மரியன்னை பெற்ற மாணிக்கமாம் மாந்தருள் தெய்வம் இயேசுபிரான் என்று படிக்கும்போது அந்நிமிடமே மின்சாரம் தாக்கியது போல் கண்டேன். பின், ''இயேசு அந்நிய தெய்வம்'' எனக் கூறி எரிச்சலுடன் பாடல் நோட்டைக் கீழே எறிந்தேன். மூன்றாவது சத்தம் இன்று இரவு 12-00 மணிக்கு உன்னுடன் இடைபடுவேன் எனக் கேட்டேன். அதே நாளில் இரவு அதே நேரம், நான் மட்டும் தனியே அமாவாசை இருளில் மூன்று மைல் தூரம் வர நிர்ப்பந்தம் ஏற்பட்ட போது, பயங்கரமான திகிலும் பயமும் நடுக்கமும் உண்டாகி, இருதயம் வெடிக்குமாப் போலிருந்த சமயம், ஒரு வெண்மை வஸ்திரம் உடையவர் என் கண் முன் வந்து, இடது கையைப் பிடித்து, பயப்படாதே காலையில் உன்னுடன் பேசிய இயேசு நானே. அப்பாடலைப் பாடு என்று கூறி $1\frac{1}{2}$ மைல் தூரம் நள்ளிரவில் என் விடுதி கொண்டு சேர்த்து உலகத்தின் முடிவு பரியந்தம் உன்னுடனே கூட இருக்கிறேன் என்று கூறிச் சென்றார். எரேமியா 31:3, கலா 1:12ன்படி அநாதி சினேகத்தால் ஆண்டவர் இயேசு என்னை இரட்சித்தார். இச்சாட்சியைப் படித்தவர்களே, நீங்களும் சங் 105:4 எரேமியா 29:13ன்படி முழு மனதோடு

தேடுங்கள். அடிமையின் மரண வியாதியையும், மரண பயத்தையும் நீக்கிய நித்திய தேவன் உங்களுக்கும் துணைபுரிவார். நீங்கள் விரும்புவதை என் நசரேயனாக இயேசு செய்வார். அடிமை, அன்பு இரட்சகர் ஆண்டவர் இயேசுவை கண்டதும், கிறிஸ்துவுக்குள் வாஞ்சையும் தாகமுமாய் வளர தேவ ஆவியானவர் உதவியும் ஒத்தாசையும் கிருபையும் நடத்துதலும் தந்தார். என் வாலிப நாளில் வல்லவர் இயேசுவை ஏற்றுக் கொண்டதும் தேவ சித்தம் என்னிலே நிறைவேற பவுலைப் போல் மன்றாடி வேண்டினேன். பல தேவ ஊழியர்கள், தீர்க்கதரிசிகள், வேதவசனம் மூலம் தேவ ஊழியத்திற்காய் துரிதப்படுத்தினார். நான் எதையும் பொருட்படுத்தாமல் கர்த்தரின் சத்தம் தெரியா சின்ன சாமுவேல் போல் படுத்த வண்ணமாயிருந்தேன். முதலாவதாக, மகனே என் காரியமாய் யார் போவார்? ஏசாயா 6:8ன்படி ஜெப கூட்டத்தில் எச்சரிக்கப்பட்டேன். இவ்வசனத்தை கேட்டதும் என் இருதயத்தை ஆயுதத்தால் தாக்கியது போல் கண்டேன். இதன் விளக்கம் தெரியாமலும் மற்றவர்களிடமும் இது குறித்து விசாரியாமல் விட்டு விட்டேன். இரண்டாவதாக பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன். யோவான் 20:21 என ஏவப்பட்டேன். இதனின் கருத்தும் அறியாமல் தாமதம் செய்து உலக வேலையில் ஈடுபட்டேன். ஆனால் மனதில் நிம்மதி ஆறுதல் சமாதானம் இன்றி எப்பொழுதும் அழுது கொண்டே தெருத் தெருவாய் திரிந்தேன். மூன்றாவதாக ஒரு இரவு சொப்பனத்தில் வெண்மை வஸ்திரம் அணிந்த ஒருவர் என் ஊருக்கு என்னை தேடி வந்து பத் 20:4 நீதி 5:7 இரு வசனங்களை வாசிக்க சொல்லி சென்றார்.

அன்றிரவே ஒரு சொப்பனம் அதிகாலையில் கண்டேன். பெரிய சமுத்திரமதில் கோடி கோடி எண்ணுக் கடங்கா மீன்கள் மாண்டு மடிந்து பார்ப்பார் கேட்பாரின்றி நாலா திசையும் நாதியின்றி கிடப்பதைக் கண்டு, திணறி, திகைத்தேன். அந்நேரம் என் அம்மா ஒரு லாரியில் என்னை எதிர் நோக்கி வந்தார்கள். நானும் லாரியில் ஏறி சிறிது தூரம்

போய் லாரியை நிறுத்தி கீழே இறங்கினேம். நான் துடியாய் துடித்து குதியாய் குதித்து என் அம்மாவிடம் சொல்கிறேன். செத்த இம் மீன்களை வாரி லாரியில் போட்டு போய் கொண்டு மார்க்கெட்டில் விற்பனை செய்யலாம் என்றேன். உடனே என் அம்மா என் தோள் பட்டையில் அடித்து. குதிக்காதே துள்ளாதே நான் செய்வதை பார் என கூறி செத்த மீன்களை இரு கையால் வாறியள்ளி ஒரு சிறிய குழியிலுள்ள கொஞ்சத் தண்ணீரில் போட்டார்கள். உடனே செத்த மீன்கள் நீந்தின. நான் வியப்பான பிரமிப்பால் வியந்து என் அம்மாவிடம் கேட்டேன். செத்த மீன்களுக்கு எப்படி உயிர் ஜீவன் வந்தது என்ற போது என் அம்மா சொன்ஞர்கள். செத்த மீன்களுக்கு ஜீவஞகிய தண்ணீர் கொடுக்க ஆளில்லாமல் ஜீவத்தண்ணீரின்றி மடிந்து கிடக்கின்றன என்ருர்கள். அந்நிமிடமே என் நித்திரை கலைந்தது. இருதயமோ பயங்கர அதிர்ச்சியான வேதனையால் கொதிக்கிறது. கதறி கதறி கண்ணீருடன் அதிகாலை ஒருவஞய் அழுது கொண்டு அவ்வாலயத்திலே முழுமையாய் தேவனிடம் என்னை ஒப்புக் கொடுத்து என் ஜீவ நாளெல்லாம் உமது ஆத்தும தரிசன தேவ பணியை செய்ய எனக்கு கிருபை பெலன் தாரும் என ஜெபித்தேன். என் அன்புக்குரியவர்களே, இவ்வாத்தும தரிசனப்படி உங்களிடம் கேட்பது செத்த மீன்களுக்கு ஜீவத்தண்ணீரை கொடுங்கள்; காட்டுங்கள்; இல்லையேல் செத்த மீன்களுக்கு ஜீவத் தண்ணீர் என்ற இந்த ஆத்தும தரிசன பணிக்காக ஜெபியுங்கள். சீரேனே ஊரானுன சிமியோனைப் போல் ஆக்கில்லா பிரிஸ்கில்லாக்களைப் போல் கழுத்தைக் கொடுத்து தாங்குங்கள். மகிமை கனம் மனிதனுக்காய் மாண்டெழுந்த மகிபன் இயேசுவுக்கே.

இங்ஙனம்,

கு. செ. மனேவா